இனி அது ரகசியம் அல்ல!

இந்திய மத்திய அரசின் அமைச்சர்கள் நியமனத்தில் தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட இடம் குறித்துத் தமிழக ஊடகங்கள் பலவும் வாதங்களை நடத்தி வருகின்றன.

இரண்டு முக்கிய அமைச்சுகள் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள் ளன. ஒன்று – நிதி பக்கம் 02

பக்கங்கள்: 16 விலை: 20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை 02.06.2019 கதிர் 209

# ரணில் யாழ். வந்த நேரத்தில் பலாலியில் குண்டுவெடிப்பு!

## இராணுவச் சிப்பாய் மரணம்!! மேலும் இரண்டு பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 02

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்குவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னர் அதியுயர் பாதுகாப்பு வலயமான பலாலிப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர். பக்கம் 15

## நேற்று மாலை யாழ்ப்பாணம் ஹெலியில் வந்தார் பிரதமர்





யாழ்ப்பாணம், ஜூன் 02

இரண்டு நாள் பயணமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை யாழ்ப்பாணம் பக்கம் 15

## பதவி துறக்கிறார் ரிஷாத்?



கொழும்பு, ஜூன் 02

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அமைச்சுப் பதவியை விரைவில் இராஜினாமா செய்யவுள்ளார் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

ரிஷாத் பதியு பக்கம் 15

## பஸ்ஸின் பின்னால் மோ.சைக்கிள் மோதி இரண்டு இளைஞர்கள் பரிதாபமாக சாவு!

### கிளிநொச்சியில் நேற்று மாலை துயரம்



கிளிநொச்சி, ஜூன் 02

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் பஸ்ஸுக்குப் பின்புறமாகச் சென்று மோதி ஏற்பட்ட விபத்தில் இரு இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். பக்கம் 15

## பதவியிலிருந்து ரிஷாத் விலகவேண்டியதில்லை

### ஐ.தே.கவுக்குள் வலுக்கும் ஆதரவு

கொழும்பு, ஜூன் 02

அமைச்சர் ரிஷாத்தைப் பதவி விலகக் கோரி அத்துரலிய ரத்ன தேரர் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ள சூழ்நிலையில், அவரின் கோரிக்கையையெல்லாம் ஏற்று பக்கம் 15

## உண்ணாவிரதத்தால் நேற்று சோர்வடைந்தார் ரத்ன தேரர்

### அவரைப் பார்க்க மக்கள் கூட்டம்



கொழும்பு, ஜூன் 02

கண்டியில் நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அத்துரலிய ரத்ன தேரரின் பக்கம் 15

## வெளிநாட்டுப் படைகளை நாட்டுக்குள் அனுமதியேன்

### ஜனாதிபதி மைத்திரிபால உறுதி



கொழும்பு, ஜூன் 02

வெளிநாட்டுப் படைகள் நாட்டுக்குள் வருவதற்கு இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பக்கம் 15

## காணாமற்போனோரின் உறவுகள் நேற்று தமிழரசு அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 07

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பக்கம் 15

## இலங்கையில் நிலைமை வழமைக்கு வரவில்லை!

### சீனத் தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 02

இலங்கையில் பாதுகாப்பு நிலவரம் இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள பக்கம் 15

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து செப்ரெம்பரில் அறிவிப்பேன்!

### எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 02


கூட்டு எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரை செப்ரெம்பரில் அறிவிப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் – ஸ்ரீலங்கா பொதுஜன பக்கம் 15

## அத்துரலிய தேரர் முன்வைக்கும் கோரிக்கைகள் நியாயமானவை

### நிறைவேற்றக் கோருகிறார் மறவன்புலவு சச்சி



யாழ்ப்பாணம், ஜூன் 02

அத்துரலிய ரத்னதேரரின் கோரிக்கைகள் நியாயமானவை. அவரும் தொண்டர்களும் இலங்கை தேசியத்தைப் பாதுகாக்கவே விரும்புகிறார்கள். அவர்களது கோரிக்கையை இலங்கை பக்கம் 15

## தனி அரசு அமைப்பதற்கு ஐ.தே.கவிடம் பலமுண்டு

### லக்ஷ்மன் கிரியெல்ல இறுமாப்பு

கொழும்பு, ஜூன் 02

ஒக்ரோபர் மாதம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சியுடன், ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனி அரசொன்றை அமைக்கும் பலம் கிடைத்துள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். பக்கம் 15



## கொழும்பில் பிக்குகள் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 02

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்கள் ஹிஸ்புல்லா, அசாத் சாலி, மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நேற்று பௌத்த பிக்குகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிஹியங்கல ஆனந்தசாகர தேரர் தலைமையிலான பிக்குகள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், இந்தக் பக்கம் 15

# இலங்கையைச் சுருட்டியது நியூசிலாந்து







இலங்கை அணியுடனான முதலாவது லீக் போட்டியில் நியூசிலாந்து அணி 10 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

ஐசிசியின் 12ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நேற்று முன் தினம் ஆரம்பமானது. இரண்டாவது லீக் போட்டி கார்டிக் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. போட்டியில் இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி, நியுசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல், 136 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக அணித் தலைவர் திமுத் கருணாரத்ன 52 ஓட்டங்களையும், குசால் ஜனித் பேரேரா 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர்.

பந்து வீச்சில் ஹென்றி 3 விக்கெட்டுகளையும், பேருகுஸன் 03 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

இலங்கை அணி நிர்ணயித்த 137 ஓட்டங்கள் என்ற இலக்கை நியூசிலாந்து அணி 16.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி அடைந்தது. (ஐ)

## ஆலய வழிபாட்டில் சமத்துவம் கோரும் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 02

வறணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலைய முன்றலில் ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் வேண்டும்! ஆண்டு தோறும் திருவிழா நடைபெறுவது உறுதிப்படுத்தப்படவேண்டும்! ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருகின்ற தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.



நேற்று இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் தலைமையிலான குழுவினரும், சிறுபான்மைத்தமிழர்மகாசபையின்செயற்பாட்டாளர்களும், தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த கலை, இலக்கியவாதிகளும், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினைச் சேர்ந்த உறுப்பினர் களும் கலந்துகொண்டனர்.

## அளம்பில் அந்தோனியார் ஆலயம் யாழ். ஆயரினால் திறந்து வைப்பு





போரால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது .

யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பி. ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்துவைக்கப்பட்டது. இராணுவமற்றும்பொலிஸ்பாதுகாப்புகளுக்கு மத்தியில் இந்தத் திறப்புவிழா நடைபெற்றது .

ஆலயம் திறந்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து விசேட திருப்பலி யாழ்.மறைமாவட்ட ஆயரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த திறப்புவிழா நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, கரைதுறைப்பற்று செயலர், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் மற்றும் அருட்தந்தையர்கள் , அருட்சகோதரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

## குருநாகல் டாக்டருக்கு எதிராக இதுவரை 429 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூன் 02

குருநாகல் மகப்பேற்று வைத்தியர் சேகு சிஹாப்டீன் மொஹமட் சாபிக்கு எதிராக இதுவரை 429 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

குருணாகல் போதனா வைத்தியசாலை, தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் மற்றும் தம்புள்ளை பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களில் இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

குருணாகலில் நேற்று மட்டும் 82 முறைப்பாடுகள் பதிவாகியதுடன், அங்கு பதிவான மொத்த எண்ணிக்கை 286 ஆகும். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சு. நிர்மலா சீதாராமனுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின், முன்னைய அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் அவர்.

அடுத்தது – வெளிவிவகார அமைச்சு. ஜெய்சங்கருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் முன்னர் வெளிவிவகாரச் செயலாளராக இருந்தவர். அணு ஆயுத ஒப்பந்தம், பூட்டான், நேபாளம் போன்ற நாடுகளின் வெளிவிவகார நிலைப்பாட்டை ஒழுங்குபடுத்தியமை போன்ற விவகாரங்களைமிகநேர்த்தியாகக்கையாண்ட வெளிவிவகார இராஜதந்திரி என்று மெச்சப்பட்டவர். சரியான பிரமுகரை, சரியான இடத்துக்கு அடையாளம் கண்டு பிரதமர் மோடி நியமித்திருக்கின்றார் என்று இவரது நியமனம் தொடர்பில் விதந்துரைக்கப்படுகின்றது.

ஆனால், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் இருவருமே தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் எனினும், தமிழகத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் அல்லர். தேர்தல்களில் மக்களைச் சந்தித்தவர்கள் அல்லர். தேர்தல்களில் மக்களைச் சந்திக்காத இரு தமிழர்களை மத்திய அமைச்சர்களாக்கி விட்டு மத்திய அமைச்சரவையில் தமிழகத்துக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது என்று கூறுவதை எங்ஙனம் ஏற்க முடியும் என சில தரப்புகள் தமிழ் நாட்டில் முணுமுணுக்கின்றன.

அந்தக் கேள்வி தப்பில்லைதான். ஆனாலும் தேர்தலில் மக்களைச் சந்திக்காமல் கொடிகட்டிப் பறந்த அரசியல்வாதிகள் இந்தியாவில் இல்லாமல் இல்லை. பத்து ஆண்டுகளாகப் பாரதப் பிரதமராக இருந்த மன்மோகன் சிங் அத்தகைய ஒருவர். சட்ட சபைகளினால் இராஜ்ய சபை (மாநிலங்களில் அவை)க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தேர்தலில் மக்களைச் சந்திக்காத வெற்றிகரமான அரசியல்வாதி.

மன்மோகன் சிங்குக்கும் இப்போது அமைச்சராகும் ஜெய்சங்கருக்கும் ஒரு தொடர்பு உண்டு.

அவர் (மன்மோகன்) இந்திய மத்திய வங்கியின் ஆளுநராக இருந்து நற்பெயரெடுத்தவர். அதனால் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இவர் (ஜெய்சங்கர்) இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்து நற்பெயரெடுத்தவர். அதனால் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

மன்மோகன் சிங் விடயத்தில் இன்னொரு கவனிக்கத்தக்க அம்சமும் உண்டு.

மன்மோகன் சிங் இந்திய மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தபோது நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியை ஸேர்' போட்டு மதிக்க வேண்டியவராக இருந்தார் இந்திய மத்திய வங்கி ஆளுநரான மன்மோகன் சிங்.

பின்னர் மன்மோகன் சிங் நிதி அமைச்சரானார். பிரணாப் முகர்ஜி சக அமைச்சரானார். அவருக்கு சமதையானார்.

அதன் பின்பு, மன்மோகன் சிங் பிரதமனார். அவருக்குக் கீழ் பிரணாப் முகர்ஜி ஓர் அமைச்சராக நியமனம் பெற்றார்.

ஒரு காலத்தில் மத்திய வங்கியின் ஆளுநரான மன்மோகன் சிங்கிற்கு Boss – ஆக – நிதியமைச்சராக – இருந்த பிரணாப் முகர்ஜி, பின்னர் அதே மன்மோகன் சிங் பிரதம மந்திரியாக இருக்கும் போது அவருக்குக் கீழ் ஓர் அமைச்சராக இருக்க வேண்டியவரானார்.

மீண்டும் ஓர் அதிரடி மாற்றம். அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி நாட்டின் ஜனாதிபதியானார். மீண்டும் அவருக்குக் கீழ் பிரதமர் நிலையில் இருக்க வேண்டியவரானார் மன்மோகன் சிங்.

இப்படி பிரணாப் முகர்ஜி – மன்மோகன் சிங் ஆகிய இருவரும் ஒருவருக்கு மேல் ஒருவர் மாறி மாறி உயர்நிலை அந்தஸ்தில் மாறிக் கொண்ட அதிசயம் நிகழ்ந்தது.

இந்த இருவரில் ஒருவர் மக்களைத் தேர்தலில் சந்திக்காத மன்மோகன் சிங். மற்றவர் வாழ்நாள் அரசியல்வாதி.

மக்களைத் தேர்தலில் சந்திக்காத இரண்டு தமிழர்கள் இந்திய மத்திய அரசில் மிகமுக்கிய பதவிகளுக்கு வந்திருக்கின்றார்கள். என்ன நடக்கின்றது என்று பார்க்கலாம்.

இலங்கைத் தமிழர் விடயத்தை நன்கு அறிந்த – பரிச்சயமுள்ள – ஜெய்சங்கர் வெளிவிவகார அமைச்சராகியிருக்கின்றமை மிகமுக்கிய அம்சம் என நான் கருதுகிறேன்.

மோடியின் பதவியேற்புக்காக புதுடில்லி சென்ற இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு 13 ஆவது அரசமைப் புத்திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கின்றமையை இந்தப் பின்புலத்தில்தான் பார்க்க வேண்டும் என நான் நினைக்கிறேன். போகப் போகப் பார்க்கலாம். புதிய போக்குகள் கட்டவிழ வாய்ப்புகள் இல்லாமல் இல்லை.

- மின்னல் -





# யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிப்பின் 38 ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம் ஜூன் 02

யாழ்ப்பாணம் பொதுநூலகம் எரிக்கப்பட்டு 38 ஆம் ஆண்டு நிறைவுநாள் நேற்று நினைவு கூரப் பட்டது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஜெய சீலன், மாநகரசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-07)

# அரசை அமைக்க அத்துரலிய தேரர் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை

## கூறுகிறார் பாலித தேவப்பெரும



கொழும்பு, ஜூன் 02

இந்த அரசை அமைப்பதற்கு அத்துரலிய ரத்ன தேரர் பெரிதாக செய்த உதவியொன்று இல்லை என பிரதி அமைச்சர் பாலித தேவ ரப்பெரும தெரிவித்துள்ளார்.

ரத்ன தேரர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப்போராட்டம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையி லேயே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அத்துரலிய ரத்ன தேரர் ஒரு காலத்தில் ஒரு பக்கத்தில் இருப்பார். இன்னுமொரு காலத்தில் அடுத்த பக்கத்துக்குப் பாய்வார். தேரர் பாயும் வேலையை மட்டும்தான் செய்கின் றார். தேரர் எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேறாதபோது இவ்வாறு செய்கின்றார். மத வழிபாடுகளில் ஈடுபடாமல் இருந்துவிட்டு, தேரர் சொல்லும் விடயங்களை ஏற்க நாம் தயாரில்லை.

அரசுக்கு அதிகாரத்துக்கு வருவதற்கு இதுபோன்றவர்களின் உதவிகள் தேவையில்லை. நாட்டு மக்களே தமது உரிமையை பிரயோ கித்துள்ளனர். மக்களின் ஆதரவு இன்னும் எங்களுக்கு இருக்கின் றது– என்றார். (ஐ)

# பொது நூலக முன்றிலில் ரெலோ

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ்ப்பாணம்பொதுநூலகளிக்கப்பட்டு 38 ஆண்டுகள் நிறைவு நினைவு தினம் ரெலோ கட்சியினரால் நேற்று நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வு ரெலோ அமைப்பின் தவிசாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலை மையில் யாழ்.பொது நூலக முன்றிலில் நடைபெற்றது.

இந்த நினைவு தின நிகழ்வில் ரெலோ வின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் அக வணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ)



# நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல்



முல்லைத்தீவு, ஜூன் 02

முல்லைத்தீவு செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுப் பொங்கல் வழிபாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

கடந்த தைப்பொங்கல் தினத்தில் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டபோது, பௌத்த பிக்குகள் மற்றும் சிலரால் இடையூறு ஏற் படுத்தப்பட்டிருந்தது. இந்த விவகாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, இரண்டு தரப்பும் வழிபாடு மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

இதையடுத்து ஆலயத்துக்குச் சென்ற மக்கள் மீளவும் இடையூறுகளைச் சந்தித்த நிலையில், நீதி மன்றம் முல்லைத்தீவு பொலிஸாருக்கு இறுக்க மான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் நேற்றுப் பொதுமக்களால் ஆல யத்தில் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட் டன. (ஐ)

# களனி பல்கலை சகல பீடங்களும் திங்களன்று மீண்டும் திறக்கப்படும்

காலவரையறை இன்றி மூடப்பட்டிருந்த களனி பல்கலைக்கழகத்தின் பீடங்கள் அனைத்தும் நாளை திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளன. பல்கலைக் கழகப்பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மாணவர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்த நிலையில், மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்கள் மூடப்பட்டிருந்தன.

தற்போது இந்த விடயத்தில் இணக்கப்பாடு ஏற்பட் டுள்ள நிலையில் பல்கலைக்கழகம் மீளத் திறக்கப்படுவ தாகப் பல்கலைக்கழகத்தின் தகவல் மற்றும் ஊடகப் பிரிவின் பணிப்பாளரான சிரேஷ்ட விரிவுரையாளர் விஜயானந்த ரூபசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# விளையாட்டு விழா இறுதி நிகழ்வும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தொண்டைமானாறு விநாயகர் சனசமூக நிலையத் தின் 51ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு தொண்டை மானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டு விழா இறுதி நிகழ்வும் பரிசளிப்பும் இன்று ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத் தில் நிலையத் தலைவர் தி.இராஜசிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக ஒற்றுமை விளை யாட்டுக் கழக பிரதான ஸ்தாபகர் இ.இரகுநாதன் கலந்து கொள்வார்.

# வெளிநாட்டுப் படைகளை அனுமதிக்கவே முடியாது!

## மதத் தலைவர்கள் கூட்டறிக்கை



கொழும்பு, ஜூன் 02

இலங்கைக்குள் எந்தவொரு நாட்டின் வெளிநாட் டுப் படைகளும் வந்து தங்கியிருக்க அனுமதிக்கமுடி யாது என முக்கிய மதத் தலைவர்கள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் தலைவர்கள், கர்தினால்மல்கம்ரஞ்சித் ஆண்டகைஉள்ளிட்டவர்கள் இந்தக் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் சுதந்திரத்தைப் பாதிக்கும் உடன்பாடு களை ஏற்படுத்தக்கூடாதென்றும், சிக்கலான உடன்பாடுகள் ஏற்படுத்தப்படுமிடத்து பொதுமக் களுக்கு அது குறித்து விளக்கமளிக்கவேண்டு மென்றும் அவர்கள் கோரினார். (ஐ)

# ராஜிதவுக்கு எதிராகவும் எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணை!

கொழும்பு, ஜூன் 02

அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வருவதற்குத் தீர்மானித்துள்ளதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பத்தர முல்லை நெலும் மாவத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின், தலைமை காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபியை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை மற்றும் மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை தொடர் பான குற்றச்சாட்டுக்கள் ஆகியவற்றை உள்ள டக்கியே ராஜிதவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட பின்னரே ராஜிதவுக்கு எதிராக நம் பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமென இந்திக அனுருத்த சுட்டிக்காட்டி னார். (ஐ)



# பொலிஸ் தகவல் வலையமைப்பு மீது திடீரெனத் தீவிர வைரஸ் தாக்குதல்!

பொலிஸ் நிலையங்களுக்கு இடையில் இலத்திரனியல் தகவல் பரிமாற்றங்களுக்குப் பயன்படுத் தப்படும்மெய்நிகர்தகவல்வலை மைப்பு (VPN network) மீது வைரஸ் தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது. பொலிஸ்பேச்சாளர்பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர இந்தத் தகவலை வெளியிட்டுள் ளார்.

இலங்கைப்பொலிஸ்விபினன் வலையமைப்பு வைரஸ் தாக்கு தலுக்கு உள்ளாகியபோதும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வைரஸ் தாக்குதல் தொடர்பாக பொலிஸ் தொழில்நுட்பப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தத் தாக்குதலினால், வைரஸ் பாதுகாப்புடன் இருந்த கணினி வலையமைப்பு பாதிக் கப்படவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர கூறியுள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தூக்கத்திலிருந்து விழித்து எழுவாரா சம்பந்தன் ஐயா?

கடைசியாக சாக்குக்குள்ளிருந்து பூனை வெளியே வந்து விட்டது. உண்மை அம்பலமாகி விட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமது உள்ளக் கிடக்கை என்னவென்பதை வெளிப்படையாகப் புட்டுக் காட்டியதன் மூலம், தாமே நம்பியிராத ஜனாதிபதிப் பதவிக்குத் தம்மை உயர்த்தி விட்ட தமிழ் மக்களுக்குத் தமது 'செய்நன்றியைக்' காட்டி விட்டார் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க வைத்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி மகிழ்ந்த தமிழர்களுக்கு இதுவும் வேணும் இன்னும் வேணும் போல...!

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தமது நிலைப்பாடு என்னவென்பதை ஜனாதிபதி மைத்திரியார் இப்போது திருவாய் மலர்ந்து கூறியிருக்கின்றார். பிரதமர்மோடியின்பதவியேற்புவைபவத்தில்பங்குபற்றுவதற்குச் சென்றிருந்த மைத்திரிபால சிறிசேன அங்கு வைத்துத் தமது கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

"தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாம் 13 ஆவது திருத்தத்தை முறைப்படி நடைமுறைப்படுத்தவே விரும்புகின்றோம். இதற்கு மேல் செல்லும் நோக்கம் எமக்கு இல்லை. 13 ஆவது திருத்தத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்." – என்று கூறி, அவர் மீது தமிழர்கள் வைத்திருந்த அற்ப சொற்ப நம்பிக்கையையும் கூட அடியோடு தகர்த்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தமது இந்தக் கூற்றின் மூலம், தமிழர்களுக்கு வாக்குக் கொடுத்து, அதன் மூலம் தமிழர்களின் வாக்குகளைக் கூண்டோடு அள்ளி, அதைப் பயன்படுத்தி ஆட்சித் தலைவராக வந்து விட்டு, வரலாற்றில் தமிழர்களை ஏமாற்றி, நம்பிக்கை மோசம் செய்த சிங்களத் தலைவர்களின் வரிசையில் முதலாவது இடத்தைப் பெறுகின்றார் மைத்திரிபால சிறிசேன.

'பதின்மூன்றாம் திருத்தம்தான், அதற்கு மேல் இல்லை' என்ற திமிர்த்தனம் பௌத்த, சிங்கள பேரினவாத மமதையின் மற்றொரு வடிவம்தான். பதின்மூன்றாம் திருத்தம் கூட உங்களுக்குக் கிடையாது என்ற மேலாதிக்க அகந்தைக் கருத்தின் பிரதிபலிப்புத்தான்.

'பதின்மூன்றாம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம் தான்; அதற்கு மேல் இல்லை' என்றால் அதன் அர்த்தம் இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது அடியோடு 'அவுட்' என்பதே.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது உண்மைச் சொரூபத்தை – இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமது நிலைப்பாட்டை – இந்தியத் தலைநகரில் நின்று கொண்டு இவ்வளவு வெளிப்படையாகக் கூறியுள்ள சூழ்நிலையில் அது தொடர்பில் தமிழர் தரப்பின் பிரதிபலிப்பு யாது? அதைத் தெட்டத் தெளிவாகவும் அப்பட்டமாகவும் முன்வைக்க வேண்டிய கடப்பாடு – கட்டாயம் – தமிழர் தலைமைக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்த ஜனாதிபதியையும், அரசையும் அதிகாரத்துக்கு கொண்டு வந்தமையில் தமிழர்களின் பங்கு கணிசமானது. தமிழ்த் தலைமைகளின் – குறிப்பாகக் கூட்டமைப்பின் – வழிகாட்டலில் அதைச் செய்தனர் தமிழ் மக்கள். இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைத் தருவார்கள் என்ற நம்பிக்கையில்தான் அதனைச் செய்தார்கள் தமிழர்களும் தமிழ்த் தலைவர்களும்.

ஆனால், புதுடில்லியில் கூறிய கருத்தின் மூலம் நான் உங்களை ஏமாற்றியே தீருவேன் என்ற செய்தியைத் தமிழர்களுக்கு திட்டவட்டமான பதிலாகத் தந்திருக்கின்றார் மைத்திரியார்.

13 ஆவது திருத்தத்துக்குள்தான் தீர்வு என்றால் அதற்கு மைத்திரி ஏன், ரணில் ஏன்? மஹிந்தவுடனேயே அதைப் பேசிப் பெற்றிருக்கலாமே...?

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காக தனது சுயசொரூபத்தை – உண்மை முகத்தை– அம்பலப்படுத்தி விட்டார் மைத்திரியார்.

அவரை நம்பி ஏமாந்த தமிழர் தரப்பு இதற்குச் சரியான எதிர்வினைகாட்ட வேண்டும். தமிழ் மக்களை நம்பி ஏமாற வைக்கும் நிலைக்கு வழிப்படுத்திய தமிழர் தலைமை இவ்விடயத்தில் உரிய பிரதிபலிப்பை வெளிப்படுத்த வேண்டும்.

'தீர்வு வரும் என்பதில் இன்னும் நம்பிக்கை இருக்கின்றது' என்ற கயிறை இனிமேலும் தமிழ் மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிராமல், ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற உண்மையைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு, அதனை அறிவித்து, அடுத்த கட்டம் குறித்துப் பேச வேண்டும்.

2015 ஜனவரியில் ஏற்பட்ட திருப்பத்தோடு ஆரம்பிக்கப்பட்ட தீர்வு முயற்சிகள் பாடையில் போகும் கட்டத்தை அடைந்து விட்டன என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு, அதற்குக் காரணமான சிங்களத் தலைமைகளைப் பெயர் சொல்லி அடையாளப்படுத்தி, பகிரங்கப்படுத்தும் நிலைமை வந்து விட்டது.

அடுத்த கட்டம் என்ன என்பது குறித்து சிந்தித்துத் தீர்மானிக்கும் கட்டாயமும் வந்து விட்டது.

நியாயமான, கௌரவமான, ஏற்றுக் கொள்ளத் தக்க தீர்வு ஒன்றுக்கு இன்னும் வாய்ப்புகள் இருக்கின்றன என்ற மாதிரித் தமிழர்களுக்குப் படம் ஓடவிட்டு விட்டு இதுவரை அரசியல் தூக்கத்தில் இருந்த சம்பந்தன் ஐயா, முழு விழிப்பு நிலைக்கு வந்து முழு உஷாருடன் – இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் முழுச் சீற்றத்துடன் –எதிர்வினையைக் காட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது.

செய்யுமா தமிழர் தலைமை? விழிப்பாரா சம்பந்தன் ஐயா?

# வவுணதீவில் இரு பொலிஸார் எப்படிக் கொல்லப்பட்டனர்?

## சஹ்ரானின் கூட்டாளிகள் பரபரப்பு வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 02

பொலிஸ் சோதனைச் சாவடிக்குள் ஒருவர் தூங்கிக்கொண்டிருந்தார். மற்றையவர் வீதியில் நின்றிருந்தார். அவரிடம் பேச்சைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது, தூங்கிக் கொண்டிருந்தவரின் முகத்தை வலையால் மூடி கத்தியால் குத்தினோம். அவர் சத்தம் போட்டுவிட்டார். காலால் உதைத்தார். இதனால், திடுக்கிட்டு வீதியில் நின்றிருந்த பொலிஸார், துப்பாக்கியை தூக்கிவிட்டார். உடனடியாக லொக்போட்டு மடக்கிப் பிடித்து கத்தியால் குத்தினோம் என தற்கொலைதாரி சஹ்ரான் ஹாஷிமின் முக்கிய சகாக்கள் மூவரும் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

வவுணதீவு சோதனைச் சாவடியில் பொலிஸார் இருவர், நவம்பர் 29 ஆம் திகதி, குத்தியும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில், தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தற்கொலைதாரி சஹ்ரான் ஹாஷிமின் முக்கிய சகாக்கள் மூவர் கைது செய்யப்பட்டனர். சி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்ட அந்த மூவரும், கொழும்பிலிருந்து வவுணதீவு சோதனைச் சாவடிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஒத்திகைப் பார்க்கப்பட்டது. இதன்போதே, அந்த மூவரும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர் என பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆயுதங்களை எடுப்பதற்கான கட்டளையை சஹ்ரான் பிறப்பித்திருந்தார். அதனடிப்படையில், சிரியாவில் ஐ.எஸ். பயிற்சி பெற்ற முஹமது ஆட்தீன் நில்கான் தலைமையிலான நால்வர் கொண்ட குழு, அவ்விரு பொலிஸாரையும் படுகொலை செய்து விட்டு, இரண்டு ஆயுதங்களையும் அபகரித்துச் சென்றது என்றார் அந்தப் பொலிஸ் அதிகாரி.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி சஹ்ரானின் சாரதியான முஹமது சரீப் ஆதம்பாலெப்பை கபூர் (வயது 54), கம்சா முகைதீன் இம்ரான் (வயது 31) முஹமது ஆசிம் சியாம் (வயது 34) ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்களாவர்.

திஹாரியில், வேலை ஒன்று இருக்கின்றது அதற்கு ரி– 56 ரகதுப்பாக்கிகள் தேவை. எனவே, அதனை எடுக்குமாறு வவுணதீவு பொலிஸார் கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர், சஹ்ரான் கட்டளையிட்டிருந்தார்.

வவுணதீவுச் சம்பவம் இடம்பெறுவதற்கு, 3 தினங்களுக்கு முன்னர் கொழும்பில் வைத்து கபூரிடம் ரி–56 ரக துப்பாக்கியை கொடுத்த சஹ்ரான், அவரைக் கொழும்பு–அக்கரைப்பற்று பஸ்ஸில் ஏற்றி அனுப்பியுள்ளார். கபூர் காத்தான்குடியில் வந்திறங்கியபோது அவரை ஏற்றிச் செல்வதற்கு கார் ஒன்று ஆயத்தமாக இருந்துள்ளது. அதிலேறிய கபூர், ஒல்லிக்குளம் பகுதிக்குச் சென்று அங்கு அந்த துப்பாக்கியை மறைத்து வைத்துள்ளார்.

வவுணதீவுச் சம்பவம் இடம்பெறுவதற்கு 3 கிழமைக்கு முன்னர் நில்கான், இம்ரான் மற்றும் சியாம் ஆகியோர் உன்னிச்சை பகுதியிலிருக்கும் கபூரின் நண்பனின் வாடிக்கு (கொட்டகை) சென்றுள்ளனர். இதன்போது வவுணதீவு வலையிறவு பாலத்தில் பொலிஸ் சோதனைச்சாவடியில் பொலிஸ் இருப்பதை அவதானித்தனர். இதனையடுத்து இந்தச் சோதனைச் சாவடியைத் தெரிவு செய்துள்ளனர்.

நவம்பர் 29 ஆம் திகதியை தெரிவு செய்தோம். ஏனென்றால் 27 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் ஆகும். அதன் பின்னர் பொலிஸாரைக் கொன்றால் அது புலிகளின் முன்னாள் போராளிகள் மீது பாதுகாப்பு படையினர் முழு சந்தேகமும் ஏற்படும். எனவே, எங்கள் மீது ஒரு துளிகூட சந்தேகம் ஏற்படாது என்பதற்காக இந்த இடம் மற்றும் திகதியைத் தெரிவு செய்தோம் என்றார் சந்தேக நபர்களில் ஒருவர்.

அன்றையதினம், முஹமது ஆட்தீன் நில்கான் தலைமையில் இந்தத் தாக்குதலுக்கு, ஒல்லிக்குளம் பகுதியில் அமைந்திருந்த முகாமிலிருந்து கபூரும், நில்கானும் ஸ்கூட்டிப் ரக மோட்டார் சைக்கிளில் ரி– 56 ரக துப்பாக்கியும் மாடு அறுக்கும் கூரிய கிறிஸ் ரக கத்திகளையும் மோட்டார் சைக்கிள் உட்பட இரு மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து நள்ளிரவு 1 மணிக்கு வெளியேறி காத்தான்குடி பகுதிக்கு வரும்போது இடையில் காத்திருந்த இம்ரானை ஏற்றிக் கொண்டனர். கல்லடிப் பாலத்தின் வாவிக்கரை வீதி ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள், மட்டு பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோலை நிரப்பிக்கொண்டு ஏறாவூர் செங்கலடி சந்திக்குச் சென்று அங்கிருந்து பதுளை வீதி ஊடாக கரடியனாறு, ஆயித்தியமலைக்குச் சென்றுள்ளது.

அங்கிருந்து வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னாள் உள்ள சந்திக்குச் சென்று அங்கு பொலிஸ் சோதனைச் சாவடிக்கு சென்றுள்ளது. அப்போது, சோதனைச் சாவடிக்கு முன்பாக நடு வீதியில் நின்றுள்ளனர். இந்த நிலையில், வழமையாக மாடு ஏற்றும் தொழிலில் ஈடுபட்டுவந்த முஹமது ஆசீம் சியாம், மாடு ஏற்றும் லொறியுடன் சென்று பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகாமையில் அன்றையதினம் நின்றிருந்தார். லொறியில் சியாம் காத்திருந்துள்ளார். இந்த நிலையில், வேவு பார்ப்பதற்கு சோதனைச் சாவடிக்கு அருகில் சென்று திரும்பி வந்த இம்ரான், காத்திருந்த நில்கான், கபூர் ஆகியோரிடம் இரு பொலிஸார் நிற்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

அப்போது லொறியைச் சோதனைச் சாவடிக்கு அருகில் செல்லுமாறு உத்தரவிட்டனர். அந்த லொறியிலிருந்து சியாம் இறங்கியதும், அந்த லொறி வவுணதீவுப் பிரதேசத்தை நோக்கிச் சென்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் மற்றுமொரு மோட்டார் சைக்கிள் அப்பகுதியூடாக வந்து கொண்டிருந்தது. அது மட்டக்களப்புப் பகுதியை நோக்கி செல்லும் வரை சகலரும் காத்திருந்தனர்.

அதன் பின்னர், மோட்டார் சைக்கிளில் நான்கு பேரும் சோதனைச் சாவடிக்கு அருகில் சென்று அங்கு மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கபூரும், இம்ரானும் பொலிஸ் உத்தியோகத்தரான கனேஸ் டினேஸுக்கு அருகில் சென்று பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு இருட்டான பகுதியில் நில்கானும் சியாமும் சென்றுநின்றிருந்தனர். இதன்போது சோதனைச் சாவடியின் உட்பகுதியில் பொலிஸ் சார்ஜன்ட் நிரோசன் இந்திர பிரசன்னா நித்திரையில் இருந்துள்ளார்.

இந்தவேளை, அதிகாலை 2.40 மணிக்கு டினேஸ் உடன் இம்ரான் நன்றாகக் கதைத்துக் கொண்டிருந்த போது அங்கிருந்த கபூரும் இருட்டில் பதுங்கிருந்த நில்கானும் சோதனைச் சாவடி உள்பகுதியில் படுத்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் இந்திக பிரசன்னாவின் முகம், கழுத்துப் பகுதியை வலையால் மூடினர். அப்போது, கத்தியால் கூர்குத்தியுள்ளார். அவ்விருவர்மீதும் பொலிஸ் சார்ஜன்ட் உதைத்துள்ளார். இதன்போதே, வெளியிலிருந்த பொலிஸ் டினேஸுக்கு சத்தம் கேட்டுள்ளது. அவர் தன்னை ஆயத்தமாகிக் கொள்வதற்கு இடையில் அவரை இம்ரான் பிடித்துக்கொண்டார். கத்தியால் வெட்டியதையடுத்து அவர் கீழே வீழ்ந்து மயங்கியுள்ளார்.

இதன் பின்னர், பொலிஸ் சார்ஜன்ட் பிரசன்னாவைக் குப்புற போட்டுக்கொண்டு, நில்கான் கொண்டு சென்ற ரி–56 ரக துப்பாக்கியால் அவர் மீது இரண்டு தடவைகள் சுட்டுள்ளார். அதன்போது கபூர் அவர் மீது கத்தியால் 9 தரம் குத்தியுள்ளார். பின்னர் மயங்கிக் கிடந்த பொலிஸ் உத்தியோகத்தர் டினேஸின் இரண்டு கைகளையும் பின்னால் வைத்து கட்டிப்போட்டு அவர் மீது கத்தியால் தாக்குதல் நடத்திவிட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

அதன்பின்னர் உடனடியாக பொலிஸாரிடமிருந்த ரிவோல்வர் ரக கைதுப்பாக்கி இரண்டையும் எடுத்துக் கொண்டு வவுணதீவு ஊடாக கொக்கட்டிச்சோலை சென்று அங்கிருந்து மண்முனைப் பாலத்துக்கு சென்று கொண்டிருந்தபோது, ஒரு மோட்டார் சைக்கிளின் டயர் காற்றுப் போயுள்ளதையடுத்து அதனை உருட்டிக் கொண்டு ஒல்லிக்குளப் பகுதியில் அமைத்திருந்த முகாமுக்குச் சென்றனர். அங்கிருந்து பொலிஸாரிடம் கைப்பற்றப்பட்ட ரிவோல்வர் ஒன்றை நிந்தவூர் பகுதியில் புதைத்து வைத்ததுடன் மற்ற ரிவோல்வர் உட்பட 6 கைத் துப்பாக்கிகளையும் புத்தளம் பகுதிக்கு எடுத்துச் சென்ற கபூர் அங்கு புதைத்து வைத்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்திய ரி– 56 ரகத் துப்பாக்கியை சஹ்ரானின் தம்பியிடம் ஒப்படைத்துள்ளதாகவும், அதன் பின்னர் சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த ஒருவரின் கைகளில் இருந்து அந்த துப்பாக்கியைப் படையினர் மீட்டுள்ளனர் என சி.ஐ.டி யினரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்தத் திட்டத்துக்கு தலைமை தாங்கிய நில்கான், சவூதி அரேபியாவுக்குச் செல்வதற்கான விசா, விமான சீட்டு என்பவற்றை ஏற்கெனவே ஒழுங்குபடுத்தி விட்டு வந்திருந்தமையால் தாக்குதல் நடத்திய கையுடன் அவர் சவூதி அரேபியாவுக்கு உடனடியாகத் தப்பிச் சென்றார். நில்கானை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவித்த சி.ஐ.டியின் அதிகாரியொருவர், அவரை இலங்கைக்கு அழைத்துவருவதற்கான இராஜதந்திர நடவடிக்கையில் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்–என்றார்.

## நாளை

03.06.2019
திங்கட்கிழமை

நட்சத்திரம்: கார்த்திகை பி.இ. 1.15 வரை
திதி : சதுர்த்தி பி.ப. 4.57 வரை
இராகுகாலம் : 4.22 – 5.52
சுப நேரம் : 8.52 – 10.22

# அத்துரலிய தேரருக்கு ஆதரவாக வியாழேந்திரனும் போராட்டம்!

## மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக












மட்டக்களப்பு, ஜூன் 02

அமைச்சர்ரிஷாத் பதியுதீன், மாகாண ஆளுநர்களான ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோரைப் பதவி நீக்கவேண்டும் எனக் கோரி, அத்துரலிய ரத்ன தேரர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மட்டக்களப்பில் நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக நேற்றுக் காலை 7 மணியளவில் இந்தப் போராட்டத்தை அவர் ஆரம்பித்துள்ளார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், மாகாண ஆளுநர்களான ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோர் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்பதே எங்களதும் விருப்பம் என்று வியாழேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால் இந்த விடயங்களை உள்ளடக்கி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அத்துரலிய ரத்ன தேரரின் போராட்டத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் இந்த அடையாள உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

வியாழேந்திரன் ஆரம்பித்துள்ள போராட்டத்தில் அவரது ஆதரவாளர்களும் கலந்து கொண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

(ஐ)

# கைத்தொழிலாளர்களை சந்தித்த பிரதி அமைச்சர் புத்திக பத்திரண

முல்லைத்தீவு, ஜூன் 02

கைத்தொழில் வாணிப பிரதி அமைச்சர் புத்திக பத்திரண நேற்று முன் தினம் முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டு மாவட்டத்தில் உள்ள கைத்தொழிலாளர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.



நேற்றுமுன்தினம் நண்பகல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் குறைகளை அறிந்து கொள்ளும் கலந்துரையாடலில் அவர் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கைத்தொழில் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் பிரதி அமைச்சர் இதன்போது கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை அவர்களுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக அரச அதிபர் கோ.தனபாலசுந்தரம், கைத்தொழில் முயற்சி அதிகார சபையின் அதிகாரிகள் மாவட்ட செயலக தொழில் பயிற்சி அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# பின்வாங்கிய சுப்ரமணியசுவாமி!



புதுடில்லி, ஜூன் 02

இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக, பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்ரமணிய சுவாமி தனது டுவிட்டர் தளத்தில் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

அதில் அண்மைய தீவிரவாதத் தாக்குதல் குறித்து தென்னிலங்கையில் உள்ள தமிழர்களான மாகாணக் கல்வி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் தொண்டமானின் மகன் ஆகியோர் நேற்றுக் காலை என்னிடம் தொலைபேசியில் பேசினார்கள். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு உள்ளூர் ஷியா முஸ்லிம்களுக்கு ஈரானுடன் உள்ள செல்வாக்கே காரணம் என அவர்கள் விவரித்தனர் என்று சுப்ரமணிய சுவாமி கூறியுள்ளார்.

மீண்டும் ஒரு மணி நேரம் கழித்து மற்றுமொரு டுவிட்டர் பதிவை இட்டுள்ள அவர், இலங்கை தாக்குதல் ஷியா பிரிவினரால் நடத்தப்பட்டது என நான் தவறாகக் கூறிவிட்டேன். அது உண்மையில்லை. இந்தத் தாக்குதல் வசாபி சன்னி பிரிவினரால் நடத்தப்பட்டுள்ளது. ஆனால், ஈரான் உதவியுடன் ஷியா கல்வி நிறுவனங்களுக்கு நிதியளிக்கப் படுகிறது. இந்த கல்வி நிறுவனம் மூலம் மத மாற்றம் செய்யப்படுகிறது என சுப்ரமணியன் சுவாமி தனது டுவிட்டர் பதிவில் கூறியுள்ளார்.

(ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 02

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை திங்கட்கிழமை** காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை– **வவுனியா பிரதேசத்தில் -**

தோணிக்கல் லக்ஸபானா கிராமம் ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# 60 ஆண்டுகளுக்கு பின்னர் வெள்ளவாய்க்கால் சீரமைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 02

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் உள்ள ஆனந்தபுரம் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் வெள்ளவாய்க்கால் புனரமைப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினரும், கோப்பாய் பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தனின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒரு கோடி 50 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வெள்ளவாய்க்கால் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் காணப்பட்டது. இதனால் அப்பகுதியில் வாழும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தன. குறிப்பாக மழை காலங்களில் பாடசாலை செல்லும் மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள் என அனைவரும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்பட்டது.

இந்த வெள்ளவாய்க்கால் புனரமைப்பு தொடர்பில் அப்பகுதி பிரதேச சபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமாரால் கோப்பாய் பிரதேச சபை அமர்வில் சிறப்பு பிரேரரணை கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் அந்த மக்களின் அவலநிலையை கோப்பாய் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனின் கவனத்துக்கும் கொண்டு சென்றார்.

அந்த பிரதேசத்திற்கு நேரடியாக சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வெள்ளவாய்க்காலை பார்வையிட்டதுடன் அப்பகுதி மக்களிடம் கலந்துரையாடினார்.

பின்னர் உடனடியாக செயற்பட்ட அவர் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 1 கோடி 50 இலட்சம் ரூபாவை வெள்ளவாய்க்கால் புனரமைப்பிற்காக ஒதுக்கியுள்ளதுடன் உடனடியாக புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கும்படி உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கி உள்ளார். (ஐ)




ரமழான் இறுதிப் பத்து இரவுகளிகல் தினமும் ஒரு மூன்று முறை சூறதுல் இஹ்லாஸ் ஓதிக் கொள்ளுங்கள். அது லைத்துல் கத்ர் இரவில் ஆகிவிட்டால், 83 வருடங்கள் தினமும் ஒரு குர்ஆனை முழுமையாக ஓதி முடித்த அளப்பரிய நன்மையைப் பெற்றுக் கொள்வீர்கள்.

**நோன்பு திறக்கும் நேரம்**

**மாலை 6.17**

**ஸஹர் முடிவு அதிகாலை 4.22**

**(எம்.எல்.லாபிர்)**

# ஊடகவியலாளர் நடேசனின் நினைவு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 02

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.





யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு நடைபெற்றது. யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வில் யாழ்.ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு சுடரேற்றி தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினர். ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன் கடந்த 2004ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி மட்டக்களப்பில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

(ஐ)

# ஒற்றை அறைக் குடிசையில் வசித்தபடி மத்திய இணை அமைச்சராகும் 'நானா'





இந்திய மத்திய இணையமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள பிரதாப் சந்திர சாரங்கி, குடிசைவீட்டில் வசிப்பவர். ஒரே ஒரு ஜோல்னா பையுடன் டெல்லிக்கு வந்துள்ள அவர்தான் அமைச்சரவையிலேயே மிக எளிய பின்னணியைக் கொண்டவர்.

மத்திய அமைச்சரவை பதவி ஏற்பு விழாவின் போது 55 வது நபராக, எளிய மனிதர் ஒருவர் மேடையில் நடந்து வர, கூட்டம் வேறு எவருக்கும் கொடுக்காத வரவேற்பை கரகோஷத்தின் மூலமும், முழக்கங்களின்மூலமும் வெளிப்படுத்தியது.

வாரப்படாத தலை, எளிய உடை என சமூகத்தின் சாமானிய மனிதர்களை பிரதிபலிக்கும் தோற்றத்துடன் மத்திய அமைச்சராக பொறுப்பு ஏற்ற



அவர்தான் 64 வயதான பிரதாப் சந்திர சாரங்கி.

மத்திய அமைச்சரவையில் சிறு, மற்றும் நடுத்தர தொழில் துறை இணையமைச்சராகவும், கால்நடை, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை இணையமைச்சர் பொறுப்பையும் ஏற்றுள்ள சாரங்கி, ஒடிசா மாநிலத்தின் பாலாசூர் தொகுதியில் இருந்து முதல் முறையாக மக்களவைக்குத் தேர்வு பெற்றுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் தம்மை எதிர்த்து போட்டியிட்ட மாநில காங்கிரஸ் கட்சித்தலைவர் நிரஞ்சன் பட்நாயக்கின் மகனும் 104 கோடி ரூபாய் சொத்துக்கு அதிபதியுமான நப ஜோதி பட்நாயக்கையும், பிஜூ ஜனதாதளத்தின் தொழிலதிபரும் 73 கோடி ரூபாய் சொத்து உடையவருமான ரபீந்திர ஜெனாவையும், 12,956 வாக்குகள் வித்தியாசத்தில் சாரங்கி தோற்கடித்தார்.

பலாசூர் மாவட்டத்தில் உள்ள கோபிநாத்பூர் கிராமத்தைச் சேர்ந்த திருமணம் செய்யாத பிராமணரான சாரங்கி, ஒற்றை அறைகொண்ட குடிசை வீட்டில்தான் வசித்து வருகிறார்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் கொள்கைகளில் ஈடுபாடுகொண்ட அவர், பஜ்ரங் தளத்தின் மாநில தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

மக்கள் பணிக்காக நாள் எல்லாம் ஒற்றைசைக்கிளில் வலம் வரும் அவரை அண்ணா என்று பொருள்படும் ஒரிய வார்த்தையான 'நானா' என்ற சொல்லால் மக்கள் அழைக்கிறார்கள்.


ஒடிசாவின் பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமங்களில் ஓராசிரியர் பள்ளிகளை தொடங்கி, கிராம மக்களிடம் நிதி பெற்று அதனை நடத்துவதன் மூலம் பல்லாயிரம் ஏழை குழந்தைகள் கல்வி கற்கும் வாய்ப்பை உருவாக்கியவர் சாரங்கி.

மதுவிலக்கை அமுல்படுத்தக் கோரியும், அனைவருக்குமான கல்வியை வலியுறுத்தியும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்ட சாரங்கி, இதற்காகப் பல முறை சிறை சென்றவர். பலாசூர் மற்றும் மயூர்கஞ்ச் மாவட்டங்களில் உள்ள பழங்குடியின கிராமங்களில் பள்ளிகள் மற்றும் மருத்துவ மையங்களை மக்களிடம் நிதி திரட்டி உருவாக்கி உள்ளார்.

ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், ஒடியா ஆகிய 4 மொழிகளில் சரளமாக பேசும் இவர், தனது வேட்புமனுவில் வரி கட்டும் அளவுக்கு வருமானம் இல்லை என குறிப்பிட்டு இருந்தார்.

குடிசைவீடு, தெருவோர குழாயில் குளியல், சைக்கிள் பயணம், வெள்ளை ஜிப்பா, பைஜாமா, தோளில் ஒரு ஜோல்னா பை, வாராத தலை என எளிய தோற்றத்தில் இருக்கும் சாரங்கி, மத்திய அமைச்சரான பின்னரும் தமது வாழ்க்கை முறை மாறாது என்று கூறியுள்ளார்.

அமைச்சர் பதவி என்பது மக்களுக்கு தொண்டு செய்ய கிடைத்த இன்னொரு வாய்ப்பு என்று கூறியுள்ள அவர், நாட்டுக்கு சேவை செய்வதன் மூலம் மக்களின் அன்பை மேலும் சம்பாதிப்பதே நோக்கம் என்றும் கூறியுள்ளார்.



மாறாத எளிமை, வாழ்நாள் முழுதும் தொடரும் மக்கள் நலப்பணி, இருமுறை எம்.எல்.ஏவாக இருந்த போதும் ஆடம்பரத்தை விரும்பாத தன்மை ஆகியவையே சாரங்கியை மாநிலம் கடந்து நாடு முழுவதும் மக்களிடம் பேச வைத்துள்ளது.

# கர்நாடகாவின் கூட்டு அரசை கவிழ்க்க பா.ஜ.க. முயலாதாம்



பெங்களூரு, ஜுன்02

கர்நாடகத்தில் கூட்டணி அரசை கவிழ்க்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபடமாட்டோம். இந்த ஆட்சியை கவிழ்க்க வேண்டாம் என்று பாரதீய ஜனதா மேலிடத் தலைவர்கள் உத்தரவிட்டுள்ளனர். ஒரு வேளை இந்த அரசு தானாக விழுந்தால், அதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது.

– கர்நாடக பாரதீய ஜனதா தலைவர் எடியூரப்பா பெங்களூருவில் நிருபர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

ஆட்சி அதிகாரத்திற்கு நாங்கள் ஆசைப்படவில்லை. சட்டசபையைக் கலைக்க பாரதீய ஜனதா முயற்சி செய்வதாக காங்கிரஸ் தலைவர் சித்தராமையா கூறியமை சரியல்ல.

எங்கள் கட்சி மத்தியில் ஆட்சியை பிடித்துள்ளது. அதனால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. கர்நாடகத்தில் இருந்து 4 பேருக்கு மத்திய மந்திரி பதவி வழங்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் எங்களுக்கு திருப்தியை தருகின்றன. அவர்கள் சிறப்பான முறையில் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

– இவ்வாறு எடியூரப்பா கூறினார்.

# இந்தியக் கடற்படைத் தளபதியாக கரம்பீர் சிங் வெள்ளி பதவியேற்றார்




சென்னை, ஜுன்02

இந்தியக் கடற்படையின் புதிய தளபதியாக கரம்பீர் சிங் பதவி ஏற்றுக்கொண்டுள்ளார்.

கடற்படை தளபதியாக இருந்த சுனில் லன்பாவின் பதவிக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கரம்பீர் சிங் 24 ஆவது கடற்படை தளபதியாக நேற்று முன்தினம் காலை பதவியேற்றுக் கொண்டார்.

வலுவான அடித்தளத்தின் மீது அமைக்கப்பட்டுள்ள இந்தியக் கடற்படை, புதிய உச்சங்களை எட்டுவதைத் தமக்கு முன்பிருந்த தளபதிகள் சாத்தியமாக்கினர் எனவும், அதே முயற் சிகளைத் தாமும் தொடர உள்ளார் எனவும் கரம்பீர் சிங் குறிப்பிட்டுள்ளார்.

ஆற்றலும் வலிமையும் கொண்ட, கடல்சார் பாதுகாப்பு தொடர்பான சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ள கடற்படையை வழி நடத்த இருக்கிறார் எனவும் கரம்பீர் சிங் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பணிமூப்பு அடிப்படையில் தமக்குக் கடற்படைத் தளபதி பதவி வழங்காமல், கரம்பீர் சிங்கிற்கு வழங்கப்பட்டுவிட்டதாக வைஸ் அட்மிரல் பிமல் வர்மா தொடர்ந்த வழக்கு, ஆயுதப் படைகள் தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ளது.

இருப்பினும் கரம்பீர் சிங் கடற்படைத் தளபதியாகப் பதவியேற்கத் தடையில்லை என தீர்ப்பாயம் கூறி விட்ட நிலையில், நேற்றுமுன்தினம் பதவியேற்பு விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# 17 ஆவது நாடாளுமன்றம் 17 ஆம் திகதி கூடுகின்றது



புதுடில்லி, ஜூன்02

இந்தியாவில் புதிய பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 17 ஆவது மக்களவையின் முதல் கூட்டத் தொடர், வரும் ஜூன் 17 ஆம் திகதி தொடங்கி ஜூலை 26ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


முதல் நாளில் புதிய எம்.பிக்கள் பதவியேற்கிறார்கள். அவர்களுக்கு தற்காலிக சபாநாயகர் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

இதையடுத்து ஜூன் 19 ஆம் திகதி மக்களவையில் சபாநாயகர் தேர்தல் நடைபெறுகிறது. இதைத்தொடர்ந்து 20ஆம் திகதியன்று குடியரசுத்தலைவர் மக்களவையில் உரை நிகழ்த்துகிறார்.

கூட்டத் தொடரின் போதே மத்திய பட்ஜெட் ஜூலை மாதம் 5 ஆம் திகதி தாக்கல் செய்யப்படுகிறது.

இந்த முடிவு மோடி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

# அமெ. வேர்ஜினியாவில் சூடு: 11 பேர் பலி: அறுவர் காயம்!



வொஷிங்டன்,ஜூன்02

அமெரிக்காவின் வேர்ஜினியா மாகாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் தென்பகுதியில் அமைந்துள்ள வேர்ஜினியா மாகாணத்தில் உள்ள வேர்ஜினியா கடற்கரைப் பகுதி மிகவும் பிரபலமானதாகும். அங்குள்ள ஒரு கட்டட வளாகத்திற்குள் திடீரென துப்பாக்கியோடு நுழைந்த மர்ம நபர், அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டார்.

எதிர்பாராத இந்த துப்பாக்கிச் சூட்டால், மக்கள் அச்சத்துடன் அங்கும் இங்கும் ஓடினர். எனினும், இந்த துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் பலியாகினர். 6 பேர் காயம் அடைந்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்துத் தகவல் கிடைத்ததும், அங்கு வந்த பாதுகாப்பு படையினர், தாக்குதல் நடத்திய நபரையும் சுட்டுக்கொன்றனர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என்ன நோக்கத்திற்காக தாக்குதல் நடத்தினார் என்பது பற்றி, இன்னும் வெளிவரவில்லை.

# கார்க் குண்டுத் தாக்குதலில் காபூலில் நான்கு பேர் சாவு!



காபூல்,ஜூன்02

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நிகழ்ந்த கார்க் குண்டுத் தாக்குதல் 4 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்க தூதரகம் அருகே வெள்ளிக்கிழமை காலையில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய இந்த தாக்குதலில் காயமடைந்த பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது மிக சக்தி வாய்ந்த வெடிகுண்டு தாக்குதல் என்றும், வீட்டின் ஜன்னல்கள் சிதறி தன் மீது காயம்பட்டு வெளியே வந்து பார்த்ததாகவும் அப்பகுதியைச் சேர்ந்த மஸ்தாகின் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

## எண்ணெய்க் கப்பல்கள் மீதான தாக்குதல்கள்:

# அரபு நாடுகளின் குற்றச்சாட்டை தொடர்ந்து நிராகரிக்கிறது ஈரான்





தெஹ்ரான்,ஜூன்02

வளைகுடாப் பகுதியில் எண்ணெய்க் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக ஈரான் மீது அரபு நாடுகளினால் முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் உடனான அணு சக்தி ஒப்பந்தத்தில் இருந்து கடந்த ஆண்டு அமெரிக்கா விலகியது முதல், இருநாடுகளுக்கும் இடையே மோதல் நீடிக்கிறது. ஈரானை எச்சரிக்கும் வகையில் மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்கா தனது போர் கப்பல்கள், போர் விமானங்கள் மற்றும் தளவாடங்களைக் குவித்து இருக்கிறது.

இதற்கிடையில், ஓமன் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள புஜைரா துறைமுகத்தில் சவுதி அரேபியாவின் 2 எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட நாச வேலை தாக்குதலின் பின்னணியில் ஈரான் இருப்பதாக அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நிலையில், வியாழனன்று சவுதி அரேபியாவின் புனித நகரமான மெக்காவில் அரபு நாடுகளின் அவசரக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல்ஆயிஸ் அல்சவுத், சரக்கு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் இந்தப் பிராந்தியத்தில் ஈரான் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு தீர்வு காண ஈரான் மீது தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் ஈரானை முறியடிக்க சர்வதேச சமூகம் ஒன்றிணைய வேண்டும் என கூறினார்.

ஆனால், அரபு நாடுகளின் கூட்டமைப்பு தங்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைப்பதாக கூறி அதனை ஈரான் நிராகரித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் வெளியுறவுத் துறை மந்திரி அப்பாஸ் மவுசாவி கூறும்போது, அரபு நாடுகள் கூட்டமைப்பில் சில அரபு தேசங்கள் வைத்த குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை. இவை, சவுதியின் முயற்சியால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியன ஈரானுக்கு எதிராக வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டின் ஒரு பகுதி என்றார்.

# மூத்த ராணுவத் தளபதி ஒருவருக்கு பாகிஸ்தானில் ஆயுள் சிறை விதிப்பு

பாகிஸ்தான் இராணுவ ரகசியங்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் இராணுவத் தளபதி ஒருவருக்கு அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது. அதே வழக்கில் கீழ்மட்ட அதிகாரிகள் இருவருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இரா ணுவத் தளபதி காமர் ஜாவத் பாஜ்வா, ஓய்வு பெற்ற பிரிகேடியர் ராஜா ரிஸ்வான் மற்றும் இராணுவ மருத்துவர் வாசிம் அக்ரம் ஆகியோர் மீது, தேசிய பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் வகையில் பல முக்கிய இராணுவ இரகசியங்களைக் கசிய விட் டனர் எனக்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இது குறித்த வழக்கு அந்நாட்டு இராணுவ நீதிமன்றத்தில் இரகசியமாக நடைபெற்று வந்த நிலையில், மூவரின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன எனத் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் இராணுவத்தளபதி காமர்ஜாவத்துக்கு ஆயுள்தண்டனையும், மற்ற இருவருக்கும் மரண தண்டனையும் விதித்து நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து மேலும் எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்கள் யாருக்குத் தகவல்களை கசிய விட்டனர் என்பது குறித்தும் தெரிவிக்கப்படவில்லை.

# தொடர் குண்டு வெடிப்பு பயங்கரம்: ஈராக்கில் 4பேர் பலி; பலர் படுகாயம்

## மற்றிருவருக்கு மரண தண்டனை

பாக்தாத்,ஜூன்02

ஈராக்கில் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் சிக்கி 4 பேர் பலியாகினர்.

ஈராக்கில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக கடந்த ஆண்டு இறுதியில் அந்நாட்டு அரசு அறிவித்தது. ஆனால் தற்போது, ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கு மீண்டும் காலூன்றித் தாக்குதல் நடத்த தொடங்கி உள்ளனர்.



தலைநகர் பாக்தாத்தில் இருந்து 250 கி.மீ. தொலைவில் உள்ள கிர்குக் நகரில் பயங்கரவாதிகள் தொடர் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தி அதிர வைத்தனர். அங்குள்ள 3 முக்கிய வீதிகளில் சாலையோரம் புதைத்து வைக்கப்பட்டிருந்த 6 வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடித்துச் சிதறின.

இந்தத் தொடர் குண்டு வெடிப்பில. சிக்கி ஒரு பொலிஸ்காரர் உள்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிர் இழந்தனர். மேலும் இருபதுக்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்தனர்.

அவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள் ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

# டிரம்ப் - கிம் ஜாங் அன் சந்திப்பு தோல்வியில் முடிந்ததால் பேச்சுக்கு ஏற்பாடு செய்த 5 அதிகாரிகள் சுட்டுக்கொலை

## வட கொரிய அதிபரின் ஆத்திரம் குறித்துத் தென்கொரியப் பத்திரிகை தகவல்

சியோல்,ஜூன்02

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உடனான தமது இரண்டாவது சந்திப்புத் தோல்வி அடைந்ததால் ஆத்திரம் அடைந்த வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன், இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்த 5 அதிகாரிகளுக்கு மரண தண்டனை அளித்தார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

வடகொரியாவின் தலைவரான கிம் ஜாங் அன் சர்ச்சைக்குப் பெயர் போனவர். தனது தந்தையின் மறைவுக்கு பின் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இவர் நாட்டில் பல அதிரடி மாற்றங்களைக் கொண்டு வந்தார்.

ஐ.நா.வின் தீர்மானங்களை மீறி தொடர்ச்சியாக அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தி சர்வதேச நாடுகளை அதிரவைத்து வந்தார். இது ஒருபுறம் இருக்க தனது அரசில் ஊழல் செய்யும் அதிகாரிகள் மற்றும் தனக்கு விசுவாசமாக இல்லாதவர்களுக்கு, கொடூரமான முறையில் மரண தண்டனை நிறைவேற்றினார் என அவ்வப்போது செய்திகள் வெளியாகும்.

அப்படியான ஒரு செய்தி தற்போது வெளியாகி உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உடனான தமது இரண்டாவது சந்திப்புத் தோல்வியடைந்த நிலையில், இந்த பேச்சுக்கு ஏற்பாடு செய்த அமெரிக்காவுக்கான சிறப்பு தூதர் கிம் ஹியோக் சோல் மற்றும் வெளியுறவுத்துறையின் மூத்த அதிகாரிகள் 4 பேரைச் சுட்டுக்கொன்று அவர் மரண தண்டனை நிறைவேற்றினார் எனத் தென்கொரியப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எலியும், பூனையுமாக இருந்து வந்த டிரம்ப் மற்றும் கிம் ஜாங் அன், கடந்த ஆண்டு ஜூன் மாதம் சிங்கப்பூரில் முதல்முறையாகச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பு மிகவும் இணக்கமாக நடைபெற்றதால் இருநாட்டு உறவில் நீடித்த விரிசல் விலகியது. இதையடுத்து வட கொரியா ஏவுகணை சோதனைகளை நிறுத்திவிட்டு அமைதிப் பாதைக்குத் திரும்பியது.

இந்த நிலையில் கொரிய தீபகற்பத்தை அணுஆயுதமற்ற பிரதேசமாக மாற்றுவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க டிரம்ப் மற்றும் கிம் ஜாங் அன் ஆகிய இருவரும் கடந்த பெப்ரவரி மாத இறுதியில் வியட்நாமில் மீண்டும் சந்தித்து பேசினர். ஆனால் இந்த சந்திப்பு முதல் சந்திப்பைபோல இணக்கமாக நடைபெறவில்லை.

கிம் ஜாங் அன்னின் கோரிக்கையை ஏற்க மறுத்து, டிரம்ப் பேச்சில் இருந்து



பாதியிலேயே வெளியேறினார். இது கிம் ஜாங் அன்னுக்கு கடும் கோபத்தை ஏற் படுத்தியது. இதையடுத்து, இந்த சந்திப்புக்கு ஏற்பாடுகளைச் செய்த சிறப்புத் தூதர் கிம் ஹியோக் சோல் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் 4 பேர் மீது நாட்டின் தலைவருக்கு துரோகம் செய்தனர் என குற்றம் சுமத்தப்பட்டது.

விசாரணைக்கு பிறகு கடந்த மார்ச் மாதம் அவர்கள் 5 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து அங்குள்ள ஒரு விமான நிலையத்தில் வைத்து, 5 பேரும் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனவும் தென்கொரியா பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமற்போனோரின் உறவினர்களுக்கு நீதி வழங்க சர்வதேசம் முன்வராமை ஏன்?

## முல்லைத்தீவில் போராடி வரும் மக்கள் கேள்வி

முல்லைத்தீவு, ஜுன் 02

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடுத்து இலங்கை அரசுடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் சர்வதேச சமூகம், தமது உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வராதது ஏன் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட, சரணடைந்த, கைதுசெய்யப்பட்ட, கடத்தப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடித் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் நாட்டின் தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகளால் பெரும் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஐ.எஸ். என்ற சர்வதேச பயங்கரவாத அமைப்பு தனது உள்ளூர் முகவர்களை பயன்படுத்தி நடத்தியிருந்த தொடர் தற்கொலைத் தாக்குதலையடுத்து இலங்கைக்குப் படையெடுத்துள்ள அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல மேற்குலக நாடுகளின் புலனாய்வாளர்கள் இலங்கைப் புலனாய்வாளர்களுடன் இணைந்து தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஐ.எஸ். ஆயுததாரிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் இலங்கையுடன் இணைந்து சர்வதேச சமூகம் விசாரணைகளை முன்னெடுப்பதுபோல், போரின் இறுதி நாள்களில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த, ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க ஏன் சர்வதேச சமூகம் முன்வராது மௌனம் காக்கின்றது என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வி எழுப்புகின்றனர்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போரின் இறுதி நாள்களில் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த, ஒப்படைக்கப்பட்ட, கைதுசெய்யப்பட்ட, கடத்தப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி தமிழர் தாயகமான வடக்கு–கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தாய்மார்கள் உள்ளிட்ட உறவுகளே இந்தக் கேள்வியை முன்வைத்திருக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுடன் 818 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி ஊடகங்கள் ஊடாக சர்வதேச சமூகத்திடம் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

இதேவேளை 250 க்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டு, 500 க்கும் மேற்பட்டோருக்கு காயங்களை ஏற்படுத்திய ஈஸ்டர் தாக்குதலையடுத்து அமுல்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு வரும் நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமது பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜுன் 08 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதி முல்லைத்தீவு மாவட்ட விஜயத்தின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கும், நில ஆக்கிரமிப்பு பிரச்சினைக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

# முள்ளியவளை நரசிம்ம வைரவர் நுழைவாயிலைத் திறந்த ரவிகரன்

முல்லைத்தீவு, ஜுன் 02

முல்லைத்தீவு – முள்ளியவளை, செங்குந்தா வீதியில் அமைந்துள்ள நரசிம்ம வைரவர் கோவிலின் நுழைவாயிலை முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் திறந்துவைத்தார்.



கடந்த 2018 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரவிகரனால் நரசிம்ம வைரவர் கோவிலின் நுழைவாயில் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் கோவிலின் நுழைவாயில் நேற்றுமுன் தினம் ரவிகரனால் திறந்தவைக்கப்பட்டது. அத்துடன் நேற்று முன் தினம் நரசிம்ம வைரவர் கோவிலின் வருடாந்த பொங்கல் விழாவும், பூசைகளும் சிறப்பாக இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் மற்றும் கோவில் நிர்வாகத்தினர், அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ)

# வடக்கு மாகாணத்தின் அரச அலுவலர்கள் மனிதாபிமானமாக பணியாற்றவேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 02




வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரச ஊழியர்களும் போருக்கு பின்னரான இந்தத் தேசத்தில் இருக்கின்ற மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையிலும் மனிதாபிமானத்துடனும் பணியாற்றவேண்டும் என்று ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ் நூலகக் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொள்முதல் நடைமுறை மற்றும் ஒப்பந்த நிர்வாகப் பாட நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நீங்கள் கற்றுக்கொண்ட இந்த விடயங்கள் வெறுமனே ஒரு காரியாலயத்தின் அடிப்படையாக மட்டுமல்ல . ஒரு நாகரிகத்தின் சமிக்ஞையாக இருக்கவேண்டும்.

எந்த மாதிரியான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று நீங்கள் தீர்மானிக்கவேண்டும். அது உங்களுக்கும் உங்கள் நாகரிகத்திற்கும் உங்களைப் பயிற்றுவித்த ஆசானுக்கும், அடிப்படையாக உங்கள் மனசாட்சிக்கும் மத்தியிலே உள்ள ஒரு கேள்வி. என்னுடைய பிரார்த்தனை எல்லாமே நீங்கள் நல்ல ஒரு நாகரிகத்தின் பயணத்திற்கு அடிப்படையாக இருப்பீர்களென எதிர்பார்க்கிறேன்–என்றார்.

(ஐ)

# பெண் அரச பணியாளர்கள் சேலை அணிவது கட்டாயம்

## பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு, ஜுன் 02

அரச ஊழியர்கள் பணிநேரத்தில் அணிய வேண்டிய ஆடைகள் தொடர்பான உத்தரவைப் பொது நிர்வாக அமைச்சு வழங்கியுள்ளது.

பெண் ஊழியர்கள் சேலை அல்லது கண்டியச் சேலை (ஒசரி) அணிய வேண்டும் என்று அந்த பொது நிர்வாக அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஆண் ஊழியர்கள் பணிநேரத்தில் காற்சட்டை மற்றும் மேற் சட்டை அல்லது தேசிய உடை அணிய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பெண் ஊழியர்கள் சேலை அல்லது கண்டியச் சேலை (ஒசரி) அணிய வேண்டும்.

எவ்வாறாயினும், சீருடை அணிய பணிக்கப்பட்டுள்ள ஊழியர்கள், அந்த சீருடையில் தான் கடமைக்கு வரவேண்டும்.

அரசசேவையிலுள்ள பெண் ஊழியர்கள் கர்ப்ப காலத்தில் தங்களுக்கு வசதியான ஆடைகளை அணிந்துவர சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும், சமய மரபுகளுக்கு இணங்க தமது உடைகளை அமைத்துக் கொள்வதற்கு யாரும் விரும்புவார்களாயின், அவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட ஆடைகளை அணிந்து, அதன் பின்னர் அந்த சமய அடையாளத்தை உறுதிப்படுத்தும் விதத்திலும், முழு முகத்தையும் தெளிவாக அடையாளம் காணக் கூடிய விதத்திலும் மேலதிக ஆடை அணிகலன்களைப் பயன்படுத்தலாம் – என்றுள்ளது.

இதேபோன்று, அரச நிறுவனங்களுக்குள் சேவைகளைப் பெறுவதற்காக வருவோரும், தம்மை தெளிவாக அடையாளம் காட்டக்கூடிய வகையில் ஆடைகளை அணிந்து வர வேண்டுமெனவும் அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ஒட்டுசுட்டான் கோட்டத்தில் முதல் 'ஸ்மார்ட்' வகுப்பறை

முல்லைத்தீவு, ஜுன் 02



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் முதலாவது ஸ்மார்ட் வகுப்பறை நேற்று முன் தினம் மாங்குளம் சண்முகரட்ணம் வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மாங்குளம் சண்முகரட்ணம் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி அ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி த.பங்கயச்செல்வன் சுன்னாகம் றோட்டரி கழகத் தலைவர் திருவாதவூரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா பிரேமகாந்த், சுன்னாகம் றோட்டரி கழகத்தின் செயலாளர் த.வாமதேவன், பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் த. தயாபரன் ஆகியோர் ஸ்மார்ட் வகுப்பறையைத் திறந்து வைத்தனர்.

(ஐ)

# நம் சுகம் கையில்

நாம் நம்முடைய அன்றாடத் தேவைகளை வினைத்திறனாக பூர்த்தி செய்வதற்கும், உற்சாகமாகவும், உள ஆரோக்கியத்துடனும் வேலைகளை செய்து முடிப்பதற்கும் உடலுக்கு வலு தேவை. உடலுக்கு தேவையான வலுவினை எமக்கு வழங்குவது நாம் அன்றாடம் உண்ணும் உணவுகளே ஆகும்.




இன்றைய காலகட்டத்தில், நேரப்பற்றாக்குறையும் அதிகரித்த வேலைப்பளுவும் இவற்றை வினைத்திறனாக கையாள முடியாத நிலைமையும், fast food, துரித உணவின் பக்கம் எம் சமூகத்தை இழுத்துச் சென்றுள்ளது. தொற்றா நோய்களின் அதிகரிப்பிற்கு இவையெல்லாம் முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

**வருமுன் காப்பதே சிறந்தது**

ஆம் எம்மையும் எம் சமூகத்தையும் நோய்களில் இருந்து பாதுகாத்து ஆரோக்கியமான நலவாழ்வு வாழ்வதற்கு வழி சமைப்பது எம் அனைவரினதும் கடமையாகும்.

ஆரோக்கியமான உணவுப் பழக்கம் எம்மிடையே குறைந்து காணப்படுகின்றது. விரும்பிய நேரங்களில் விருப்பமான உணவினை உண்பது எம் வழக்கமாகி விட்டது.

சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் மற்றும் இனிப்பு வகைகள் போன்றவையே இன்று அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆரோக்கியமான உணவுப் பழக்கமானது நீண்ட மற்றும் குறுகிய கால சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படாதவாறு பாதுகாக்கிறது. அத்தோடு உடலிற்கு தீமை பயக்கக் கூடிய பதார்த்தங்களை தவிர்ந்து இயற்கையான முறையில் பயிரிடப்பட்ட உணவுகளை உட்கொண்டு மேலும் ஆரோக்கியத்தை வலுப்படுத்துதலாகும்.

மேலும் ஆரோக்கியமான உணவுப் பழக்கமானது எமது மன உளைச்சலை தவிர்த்து எம் பொன்னான நேரத்தையும், பணத்தையும் சேமித்து பயனுள்ள வழியில் உபயோகப்படுத்த உதவுகின்றது. மேலும் எமது சமுதாயத்திற்கான எடுத்துக் காட்டாக நம் வாழ்க்கை அமைய வழிவகுக்கின்றது.

ஆரோக்கியமான உணவுகளாக–

மரக்கறிகள், கீரை வகைகள், பழங்கள், தானிய வகைகள், இறைச்சி, மீன், முட்டை, ஆடை அகற்றிய பால், குறை நிரப்பு அமிலங்கள் கொண்ட எண்ணெய் போன்றவற்றை கருதலாம்.

உடல் எடை அதிகரிப்பு என்பது இன்றைய கால கட்டத்திலே

மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன் றாகும். இதற்கு எம் ஆரோக்கியமற்ற உணவுப் பழக் கமும், போதியளவு உடற்பயிற்சியின்மையும் காரணமாகும். அதியுயர் கலோரி கொண்ட உணவுப் பொருள்கள், அதிகூடிய சீனித் தன்மை கொண்ட உணவுகள், அதி கூடிய கொழுப்பு மற்றும் உப்பு கொண்ட உணவுப் பொருள்களின் பாவனை இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஆரோக்கியமான உணவு பழக்கத்தை எவ்வாறு நாம் கடைப்பிடிப்பது என்ற கேள்வி எம் மனதில் தற்போது உதித்திருக்கும்.

நாம் அன்றாடம் உண்ணும் உணவின் அளவீடுகளை மாற்றியமைத்தாலே போதும், நம் உணவுப் பழக்கமும் ஆரோக்கியமானதாக, மறுசீரமைக் கப்பட்டு விடும்.

வழமையான எம்முடைய சாப்பாட்டு தட்டினை எடுத்தால் அதில் அதிகளவு சோறும் குறைந்தளவு மரக்கறிகளும் காணப்படும். இது தவறான முறையாகும்.

எமது உணவுத் தட்டானது ஏறத்தாழ அரைப்பகுதி மரக்கறி மற்றும் கீரை வகைகளை கொண்டதாகவும்–

கால் பகுதி மாச்சத்தான சோறு, பிட்டு போன்ற உணவுகளைக் கொண்டதாகவும்

மற்றைய கால்பகுதி புரதச்சத்து நிறைந்த பருப்பு, மீன் இறைச்சி போன்ற உணவுகளைக் கொண்டதாகவும் அமைய வேண்டும்.

அது மட்டுமன்றி நாம் உட்கொள்ளும் snakes யும் ஆரோக்கியமானதாக உட்கொள்வது நன்று. எனவே நாம் பழங்கள் அவித்த மரக்கறிகளை எம்முடைய snakes (துணை ஆகாரமாக) எடுத்து கொள்வது சிறப்பானதாகும்.

தேநீர் குளிர்பானங்களை குறைப்பது நன்று . நாளாந்தம் போதியளவு நீர் உட்கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி நாளாந்தம் 30 minite நடைபயிற்சியில் ஈடுபடுவது. விளையாட்டில் ஈடுபடுவது சிறந்ததாகும்.

உடற்பருமன்கூடியவர்கள் சாப்பிடாமல் உணவினை குறைத்துஅல்லது விடுத்து இருக்கிறார்கள் ஆனால் அது உகந்த பழக்கமல்ல இதனால் உங்களின் உடற்பருமன்குறைவடையாது மேலும் அதிகரித்துச் செல்லும்.

நாம் உண்ணும் உணவில் கலோரி பெறுமானம் குறைந்த உணவுகளை உட்கொண்டு உடற்பயிற்சி செய்வதே எமது உடற்பருமனைக் குறைக்க ஏதுவான வழியாக அமைகின்றது.

நாம் அனைவரும் காலை மாலை தேநீர் அருந்துவது வழக்கம் அதற்கு பதிலாக ஆடை நீக்கிய பாலினை அருந்துவது மேலும் காலை நேர உணவிற்கு பதிலாக கடலை கௌப்பி பயறு போன்ற ஏதேனும் ஒன்றினை ஒரு தேநீர் குடுவையின் அளவில் உட்க்கொள்ளலாம் மதிய நேர உணவின் போது மேற்கூறியவாறு சரியான உணவுத் தட்டின் அமைப்பில் சோறு, மரக்கறி, மீன் அல்லது இறைச்சியினை உட்கொள்ளலாம்

இரவு உணவின் போது 3.5 அரிசி மாவில் செய்த இடியப்பம் பருப்போ அல்லது மரக்கறிகளை கொண்ட மேற்க்கூறியசரியான உணவுத்திட்டத்தின் அமைப்பில் உண்ணலாம்.

இடைநேரங்களின் போது கலோரி குறைந்த இலகுவாக இயற்கையாகக் கிடைக்கக் கூடிய துணை ஆகாரங்களை தெரிவு செய்வது மேலும் சிறப்பானதாகும்.

இவற்றை கடைப்பிடிப்பது மட்டுமின்றி 30 நிமிடங்கள் நடைபயிற்சியினையும் தவறாமல் செய்து வந்தால் உங்களின் உடற்பருமன் குறையும் என்பதில் ஐயமில்லை.

எனவே அனைவரும் எம்முடைய உணவு பழக்கத்தினை மாற்றி ஆரோக்கியமான வாழ்வினை வாழ்வோமாக.

**தொடர்புகளுக்கு:** *யாழ்ப்பாண மருத்துவபீட சமூக மற்றும் குடும்ப மருத்துவத்துறையின் குடும்ப மருத்துவ நிலையம், கோண்டாவில்.*
**021 205 3760**

**ஆக்கம் :**
Dr.S. **குமரன்** (MBBS, DFM, MD)
(குடும்ப வைத்திய நிபுணர்)
Dr. J. **ஹர்சிகா** (MBBS)



# குழந்தை வளர்ப்பில் தாய் ஒருவரின் புத்திசாலித்தனம்




சமீபத்தில், என் நண்பர் வீட்டிற்கு சென்றிருந்தேன். அவருடைய மூன்று வயது குழந்தை, பிரிஜ்ஜிலிருந்து இரண்டு லீற்றர் கோக் போத்தலை எடுக்க முயன்ற போது, கை தவறி, கீழே விழுந்து, அதிலிருந்த கோக் முழுவதும் கொட்டி விட்டது.

நண்பரின் மனைவி, தன் குழந்தையை கண்டித்து அடிக்கப் போகிறார் என்று நினைத்து, நான் பயந்து கொண்டிருந்தேன்;

ஆனால், நடந்ததோ வேறு...

'பளுவை தூக்கறதுக்கு அப்படி தான் முயற்சி பண்ணணும். கொட்டினது பரவாயில்லை. அதில கொஞ்ச நேரம் உன் இஷ்டத்துக்கு விளையாடிக்கோ' என்றார்.

குழந்தையும் அதில் கைகளை அலசி விளையாட ஆரம்பித்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு, இதைக் கொட்டினது யாரோ, அவங்க தான் துடைக்கணும். இந்த சின்ன டவலால கவனமா துடைச்சுடு' என்று, குழந்தையிடம் டவலை கொடுத்தாள்.

தன்னிடம் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப் பட்ட பெருமை முகத்தில் ததும்ப, அந்தக் குழந்தை தரையைச் சுத்தமாகத் துடைத்து, பெருமிதத்துடன் அம்மாவைப் பார்த்தது. அதோடு, இதே போத்தலில் குழாயிலிருந்து முழுதும் தண்ணி பிடிச்சு, கொட்டாம பிரிஜ்ஜில கொண்டு வைக்க இப்ப பழகிக்கோ' என்று சொல்லி, குழந்தையை குழாயின் அருகில் அழைத்துப் போனார்.

அந்த தாயை நான் ஆச்சரியத்துடன் பார்த்தேன். குழந்தைகளை வளர்க்கும் முறைகளை விளக்கும் ஒரு புத்தகத்தில் படித்ததை, நான் நடைமுறையில் பயன்படுத்துகிறேன்.

இந்த முறைகளை பின்பற்றுவதால், குழந்தை, தான் செய்த தவறை உணர்கிறது. தவறு செய்தால், துடைப்பது போன்ற தண்டனையை தான் அனுபவிக்க வேண்டும் என்று மென்மையாக குழந்தையை உணர வைக்க முடிகிறது.

மீண்டும், அதே தவறை செய்யாமலிருக்க, பெற்றோராகிய நாம்தான் குழந்தையை பழக்க வேண்டும். அதற்கு தான் குழாயில் தண்ணீர் பிடித்து பழகச் சொன்னேன்' என்று, அவர் விளக்கிய போது, ஒவ்வொரு பெற்றோரும் குழந்தைகள் வளர்ப்பில் இம்மாதிரி மென்மையான முறைகளை பின்பற்றலாமே என்று தோன்றியது. புத்தகங்களை படித்தால் மட்டும் போதாது, தக்க தருணத்தில் நடைமுறைப் படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும்

ஒவ்வொரு பெற்றோரும் குழந்தைகள் வளர்ப்பில் இம்மாதிரி மென்மையான முறைகளை பின்பற்றலாமே....

**-வைதேகி**



# முகவரி இல்லாத அநாதையாகி விடும் அவலத்தில் தமிழர்!

இன்றைய நாகரிக மாற்றத்தால் முன்பிருந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகள் மிகுதியும் தளர்ந்து சமுதாயத்தில் எல்லா நிலையிலும் சீர்கேடு நிகழ்வதைக் காணமுடிகிறது.

இன்றைய சமுதாயத்தில் மனிதர்கள் பல வாழ்வியல் நெறிமுறைகளை இழந்துவிட்டனர். வாழ்க்கை என்பது ஒரு சிறந்த கலையாகும். அதனை நல்லமுறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். மனித சமுதாயம் தன் வாழ்க்கைமுறை, நாகரிகம் ஆகியன சீர்குலையாமல் இருக்கவே நெறிமுறைகளையும், விதிமுறைகளையும் வகுத்தது. அது முதல் அந்நெறி முறைகளையும், விதி முறைகளையும் பின் பற்றிய வாழ்க்கை முறையானது நிலை கொள்ளத் தொடங்கின. தமிழர்கள் கண்ட வாழ்வு நெறிகளும், நாகரிகமும் உலகத்தாருக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்வன ஆகும்.

வாழ்வை நல்லமுறையில் அமைத் துக்கொள்ள வேண்டுமெனில் நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும் என்று நினைக்க வேண்டும். நம் தமிழ் மக்கள் கொண்ட உயரிய கொள்கையே வாழ்; வாழவை என்பதாகும். இக்கொள் கைகளைப் பின்பற்றுவதால் சமூகத்தில் குற்றங்கள் பல தானாகவே குறையும் என்பது உறுதி.

கட்டுப்பாடுகள் மனிதனை நெறிப்படுத்தும் ஒரு வழிமுறையேயாகும். கட்டுப்பாடுகளை மனத்துள் கொண்டவர்கள் பண்புடையவர்களாகின்றனர். சமுதாயத்தில் கடைப்பிடிக்கப் படும் கட்டுப்பாடுகள் மனித சமுதாயத்தைப் பண்படுத்தவே வகுக்கப்பட்டுள்ளன. நம்தமிழர்கள் மிகச்சிறப்பான வாழ்வு வாழ்ந்தவர்கள்.

தமிழர்களின் வாழ்வியலை ஆராய்ந்தால் கட்டுப்பாடுகளை அவர்கள் ஒருபோதும் சுமையாகக் கருதியதில்லை. சமுதாயத்தில் ஏமாற்றங்களும், வஞ்சங்களும் நிகழாது தடுக்க அக்கட்டுப்பாடுகளே மிகச்சிறந்த ஆயுதமாகத் திகழ்ந்தன. இன்றைய நாகரிக மாற்றத்தால் முன்பிருந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகள் மிகுதியும் தளர்ந்து சமுதாயத்தில் எல்லா நிலையிலும் சீர்கேடு நிகழ்வதைக் காணமுடிகிறது.

ஒழுக்கக்கேடு ஒரு கொடியநோய். சமுதாயத்தில் ஏற்படும் குழப்பங்கள் எல்லாம் அந்நோயின் அறிகுறிகளே ஆகும். சமுதாயத்தில் நிகழும் குற்றங்களுக்குப் பொருளாதார வறுமையும் அறியாமைநிறைந்த மனமும் பெரும் காரணிகளாக அமைகின்றன. இவற்றில் பொருளாதாரத்தில் மாற்றம் செய் வது எளிது. ஆனால் உள்ளத்தில் படிந்துள்ள இருளை அகற்றுதல் அவ்வளவு எளிதன்று. எனவே, சமூகம் கட்டுப்பாடுகளையும் நெறிமுறைகளையும் மதித்து வாழும்போதுதான் மீண்டும் உயரிய சமுதாயம் துளிர்விடும். மன இருளும் நீங்கும்.

ஒழுக்கமே நன்மைகளுக்கெல்லாம் அடிப்படை. இன்றைய சமுதாயம் ஒழுக்கநெறி தவறிவிட்டதோ? என எண்ணத் தோன்றுகிறது. மக்களுள் பலர் பணந்தேடும் நோக்கையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, எவ்வழியிலும் பணம் தேட எண்ணுகிறார்கள். ஆனால் வாழ்க்கை என்பது எப்படியும் வாழலாம் என்பதில் அல்ல.

இப்படித்தான் வாழவேண்டும் என்பதில்தான் உள்ளது. நம் முன்னோர்கள் உயரிய நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்ததால்தான் தமிழ்ச் சமூக நாக ரிகம் உலகத்திற்கே எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது. சமூகச் சீரழிவுகள் மாற வேண்டுமெனில் குழந்தைகளிடத்திலிருந்தே மாற்றங்களை விதைக்க வேண்டும்.

இன்றைய சூழலில் சமுதாயத்தை மாற்ற மேடைப்பேச்சோ பல வகையான அறிவுரைக் கட்டுரைகளோ அவசிய மில்லை. ஒவ்வொரு பெற்றோரும் தம் குழந்தைகளை நல்லமுறையில் உரு வாக்குதலே இன்றியமையாததாகும்.

அதுவே நாம் நாட்டிற்குச் செய்யும் முதற்கடமையுமாகும். நல்ல கல்வியை அவர்களுக்குக் கொடுத்து அவர்களிடத்து மறைந் துள்ள ஆற்றல்களைக் கண்டறிந்து அவற்றை வெளிக்கொணர்ந்து, அறிவைப் பெருக்கி, இளம் உள்ளங்களில் நற்பண்புகள் என்னும் விதைகளைத் தூவி, அவர்களை வளர்த்தால் உறுதியாக நம் சமுதாயம் சீர்பெறும்.

உணவு, உடை, பழக்க வழக்கங்கள், திருமணம் போன்ற விழாக்களின் நிகழ்முறைகள் போன்றவை அனைத் தும் தமிழர்களின் மரபுப்படி அர்த்தமுள்ளவை. நம் நாடு பல்வேறு தட்பவெப்ப நிலைக்கு உட்பட்டது. அந்நிலையில் உணவு, உடை போன்றவற்றையும் அந்நிலைக்கு ஏற்றவகையிலேயே அமைத்துள்ளனர். ஆனால் அதைத் தவிர்த்து உணவுப் பழக்க வழக்கத்தை நாம் மாற்றிக் கொள்ளும்போது அவை நம் தட்பவெப்பத்திற்கு ஏற்றதாக அமையாமல் பல நோய்களை ஏற்படுத்துகின்றன.

**தடம் மாறுகிறதா அவனின் கலாசாரம், பண்பாடு**

நாகரிகம் என்னும் பெயரில் இன்று உடையமைப்பில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றங்கள் நிகழ்வதைக் காண முடியும். உடுத்தும் உடையில் மருத்துவம் நிறைந்துள்ளது என அறிஞர்கள் கூறுவர். நம் தட்பவெட்பத்திற்குப் பருத்தியாடையே மிகச் சிறந்தது என்கின்றனர். ஆனால் இன்று அதை விடுத்து ஆணும், பெண்ணும் உடல் நலத்தைப் பாதிக்கும் வகையில் உடை உடுத்துவது நாகரிகச் சிதைவையே உணர்த்துகிறது.



தமிழர்கள் தங்களின் தலை சிறந்த நாகரிகங்களை முற்றிலுமாக மறந்து விடும் காலம் மிக அருகில் வந்து விட்டது என்பதைத் தற்காலச் சூழலில் உணர முடிகிறது. மொழியும், பண்பாடும் ஒவ்வொரு மனிதருக்கும் முகவரியாக அமைவன ஆகும். இவை இரண்டும் இல்லையெனில் மனிதன் அடையாள மின்றி முகவரி இல்லாத அநாதையாகிவிடுவான். தமிழர்களுக்கு அந்தநிலை

# மோடியின் அமைச்சரவையில் சகலகலாவல்லவன் ஜெய்சங்கர்



பிரதமர் நரேந்திர மோடியின் புதிய அமைச்ச ரவையில் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் என்ற பெயர் இடம் பெற்றிருந்தது பலருக்கும் ஆச்சரியம் தரும் விஷயமாக அமைந்தது.

பெரும்பாலும், கடந்த அமைச்ச ரவையில் இடம் பெற்றவர்களே இந்த முறையும் இடம் பெற்றிருக்கிறார்கள். பதவியேற்று கொண்ட 25 கேபினட் அமைச்சர்களில் மூன்று பேர் மட்டுமே புதுமுகங்கள். அதில் ஒருவர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர். இவர் இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை செயலாளராக இருந்தவர்.

கடந்த முறை வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த சுஷ்மா ஸ்வராஜ், உடல்நிலை காரணங்களால், இந்த முறை மக்களவைத் தேர்தலில் போட்டியிடவில்லை. தேர்தலில் போட்டியிடாமல், அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும்ஜெய்சங்கர், வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

2013ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கான இந்திய தூதராக ஜெய்சங்கர் நியமிக்கப்பட்டார். அவர் அந்த பொறுப் பேற்றுக் கொண்டவுடன் சர்ச்சைக்குரிய தெய்வானி கோப்ரகடே வழக்கை இவர் கையாள வேண்டியிருந்தது.

இந்திய வெளியுறவு அதிகாரியாக அமெரிக்காவில் பணியாற்றி வந்த தெய்வானி, விசா மோசடி குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட்டார். அவரை விடுவித்து இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியதில் ஜெய்சங்கருக்கு முக்கிய பங்குள்ளது.

அதே போல குஜராத் கலவர வழக்கையடுத்து அமெரிக்காவுக்குள் நுழைய நரேந்திர மோடிக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. 2014ஆம் ஆண்டு பிரதமரானவுடன் அத்தடை நீக்கப்பட்டு, முதல் முறையாக அமெரிக்கா சென்றார் மோடி. செப்ரெம்பர் 2014ஆம் ஆண்டு மோடியின் அமெரிக்க பயணித்திற்கு திட்டமிட்டதோடு, அங்கு அவரை வரவேற்று, இந்திய அமெரிக்க மக்களோடு விருந்து ஏற்பாடு செய்திருந்தார் ஜெய்சங்கர்.

**ஜெய்சங்கர் குறித்த மேலும் சில சுவாரஸ்ய தகவல்கள்:**

★தமிழகத்தை சேர்ந்த ஜெய்சங்கர், 1955ஆம் ஆண்டு டெல்லியில் பிறந்தார். இவரது தந்தை கே. சுப்பிரமணியம் சர்வதேச மூலோபாய விவகாரங்களின் ஆய்வாளராக இருந்தார்.

★ஜெய்சங்கரின் மனைவி க்யோக்கோ ஜெய்சங்கர், ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்.

★ 1977ஆம் ஆண்டு இந்திய வெளியு றவுப் பணியில் சேர்ந்த இவர், முதலில் ரஷ்யாவில் உள்ள இந்திய தூதரகத்தில் பணியாற்றினார்.

1985 இல் அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகத்தில் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

★1988ஆம் ஆண்டு இலங்கை ராணுவத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போரின்போது, இந்தியாவின் அமைதி காக்கும் படையின் செயலாளராகவும், அரசியல் ஆலோசகராகவும் ஜெய்சங்கர் செயல்பட்டார்.

★2000ல் செக் குடியரசின் இந்திய தூதராக நியமிக்கப்படும் முன்பு, ஹங்கேரி மற்றும் ஜப்பான் நாட்டில் உள்ள இந்திய தூதரகங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

★ இந்திய அமெரிக்க அணுஆயுத ஒப்பந்த பேச்சு வார்த்தைகளில் ஜெய்சங்கர் முக்கிய பங்காற்றியுள்ளார்.

★ 2009ஆம் ஆண்டு சீனாவுக்கான இந்திய தூதராக இவர் நியமிக்கப்பட்டார்.

★மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது, வெளியுறவுத்துறை அமைச்சர் பொறுப்புக்காக ஜெய்சங்கரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

★2015ஆம் ஆண்டு, இந்தியாவின் வெளியுறவு செயலாளராக நியமிக்கப்பட்டார் ஜெய்சங்கர்.

★ கடந்தாண்டு டாடா குழுமத்தின் உலகளாவிய கார்ப்பரேட் விவகாரங்களின் தலைவராக பணியாற்றினார்.

★மோடியின் அமைச்சரவையில் உள்ள அரசியல் சாராத ஒரே நபர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர்.

★ஜெய்சங்கருக்கு தமிழ், ஆங்கிலம், இந்தி, ரஷ்யன், மேண்டரின் ஆகிய மொழிகள் தெரியும்.

காலைக்கதிர்
Kalaikathir



# இளவயது முதலே செயல் வீரன் பிரதமர் மோடி!

## நரேந்திர மோடி: தேநீர் கடை முதல் நாடாளுமன்றம் வரை - வாழ்க்கைப் பயணம் முழு தொகுப்பு

இந்தியாவின் 17வது மக்கள வையின் பிரதமராக மீண்டும் பதவியேற்றிருக்கிறார் நரேந்திர மோடி. அவரது வாழ்க்கை பயணம், கூறியவை, செய்தவை என அனைத்தையும் முழுமையாக இங்கே தொகுத்தளிக்கப்படுகிறது.

2014ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு நடந்த சம்பவம் இது. தேர்தல் பிரசாரத்தில் பேசிய முலாயம் சிங் யாதவ், உத்தரப் பிரதேசத்தை குஜராத்தாக மாற்ற மோடியால் முடியாது என்று குறிப்பிட்டார்.

அதற்கு அடுத்த நாள் தனது தேர்தல் பிரசாரத்தில் பேசிய நரேந்திர மோடி, முலாயமின் பாணியிலேயே பதிலளித்தார். மோடியால் உத்தரப்பிரதேசத்தை இரண்டாவது குஜராத்தாக மாற்ற முடியாது என்று ஒரு தலைவர் சொல்கிறார். இரண்டாவது குஜராத்தை உருவாக்க முக்கியமானது எது என்று தெரியுமா? 56 அங்குல அளவு கொண்ட மார்பு.

இந்த ஒற்றை வார்த்தை, தேர்தல் களத்தில் மோடியை வலிமையானவராக முன்னெடுத்துச் சென்று மக்களை ஈர்த்து, அவரை பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் அமரச் செய்தது.

ஆனால் அகமதாபாத்தில் மோடியின் துணிகளை தைக்கும் 'ஜெட் ப்ளூ' என்ற கடையை மோடியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய நீலஞ்சன் முகோபாத்யாய் அணுகியபோது மோடியின் மார்பளவை உறுதி செய்யமுடியவில்லை. தையற் கலைஞரிடம் மோதியின் உண்மையான மார்பு அளவைப் பற்றி நீலஞ்சன் கேட்டபோது அவர் மௌனமாகவே இருந்தார். ஆனால் மோடியின் மார்பளவு 56 அங்குலம் இல்லை என்று மட்டும் அவர் தெரிவித்தார்.

பிறகு, பீமாராவ் அம்பேத்கர் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு மோடியின் குர்தாவை தைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டபோது நரேந்திர மோடியின் மார்பளவு 50 அங்குலம் என்ற உண்மை வெளியானது.

### சிறுவனாக இருக்கும் போதே விவாதிக்கும் பழக்கம்

பள்ளிப்பருவத்தில் ஒரு சராசரி மாணவராகவே இருந்தார் மோடி. பி.என் உயர்நிலைப் பள்ளியில் படித்த மோடியின் ஆசிரியர் பிரஹ்லாத் பாயி படேலிடம் உரையாடியபோது அவர் கூறியவற்றை நிலஞ்சன் முகோபாத்யாய் எழுதிய மோடியின் வாழ்க்கை வரலாறு புத்தகத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாணவராக இருந்தபோதே அதிக விவாதங்கள் செய்வார் நரேந்திரா. ஒரு முறை வீட்டுப்பாடங்கள் எழுதியவற்றை, வகுப்பின் மோனிட்டரிடம் காட்டச் சொல்லியிருந்தேன். அதற்கு, என்னுடைய வேலையை ஆசிரியரிடம் மட்டுமே காண்பிப்பேன், வேறு யாருக்கும் காண்பிக்க மாட்டேன் என்று மோடி தெளிவாக சொல்லி விட்டார், என்று நரேந்திர மோடி த மேன், த டைம்ஸ் புத்தகத்தில் மோடியின் ஆசிரியரின் கருத்தை பதிவு செய்திருக்கிறார் நீலஞ்சன் முகோபாத்யாய்.

### முதலைகள் நிரம்பிய ஏரியை கடந்த தீரம்

மோடியின் பரம விரோதிகள் கூட அவரது தன்னம்பிக்கையின் மீது சந்தேகம் எழுப்ப மாட்டார்கள். எழுத்தாளர் ஏண்டி மோரோ எழுதிய Narendra Modi: A Political Biography என்ற மோடியின் வாழ்க்கை வரலாற்றில் கீழ்கண்ட சுவாரசியமான சம்பவத்தை குறிப்பிட்டுள்ளார்.

மோடியின் பால்ய வயதில் நடந்த சம்பவம் இது. சர்மிஷ்டா ஏரிக்கு அருகில் ஒரு கோவில் இருந்தது. சுபநாட்களில் கோவிலின் கொடி மாற்றப்படும். கனமழை பெய்த சமயத்தில், கொடியை மாற்ற வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அப்போது, அந்த ஏரியை கடந்து சென்று கொடியை மாற்ற முடிவு செய்தார் மோடி. அப்போது அந்த ஏரியில் முதலைகள் அதிகமாக இருந்தமையால், அவற்றை விரட்டுவதற்காக கரையோர மக்கள் தமுக்கு (பறை) அடித்தார்கள். அப்போது நரேந்திர மோடி ஏரியை தனியாகவே நீந்திக் கடந்து சென்று கோவிலில் இருந்த கொடியை மாற்றிவிட்டு வந்தார். அவர் திரும்பி வந்ததும், கூடியிருந்த மக்கள் அவரை தோளில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள்.

### தேநீர்க்கடை

சிறுவயதில் இருந்தே வீட்டு வேலைகளில் உதவி செய்யும் பழக்கம் கொண்டவர் மோடி. தினசரி பள்ளி முடிந்ததுமே, வட்நகர் ரயில் நிலையத்தில் இருக்கும் தந்தையின் தேநீர் கடைக்கு சென்றுவிடுவார் நரேந்திர மோடி. நான் தேநீர் விற்றவன் என்று மோடி எப்போதுமே பெருமையாக குறிப்பிடுவார். ஒரு முறை அசாம் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுடன் பேசும்போது, உங்கள் அசாமின் தேநீரை மக்களுக்கு விற்றுத்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன், என்று மோடி குறிப்பிட்டார்.




### அரசியல் அறிவியல் படிப்பில் எம்.ஏ

பள்ளிப்படிப்பிற்கு பிறகு ஜாம்நகரில் உள்ள சைனிக் பள்ளியில் சேர மோடிக்கு ஆசை இருந்தாலும், குடும்பத்தின் பொருளாதார நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை.

அதுமட்டுமல்ல, படிப்புக்காக தனது மகன் சொந்த ஊரை விட்டு வெளியே செல்வதை மோடியின் தந்தையும் விரும்பவில்லை. எனவே, உள்ளூர் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பில் சேர்ந்தார் நரேந்திர மோடி.

ஆனால் வருகைப்பதிவு குறைந்த காரணத்தால் கல்லூரி படிப்பை அவரால் தொடர முடியவில்லை. பிறகு தொலைதூரக் கல்வி திட்டத்தின் மூலமாக டெல்லி பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டமும், பிறகு குஜராத் பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியலில் முதுகலை பட்டமும் பெற்றார் நரேந்திர மோடி.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நரேந்திர மோடியின் எம்.ஏ பட்டப்படிப்பு குறித்த தகவலை குஜராத் பல்கலைக் கழகத்தில் பெற்றபோது, 1983ஆம் ஆண்டு முதல் வகுப்பில் அவர் தேர்ச்சியடைந்தார் எனத் தெரியவந்தது. மோடியின் பட்டப்படிப்பு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பிரிவுகள் எம்.ஏ பாடத்திட்டத்திலேயே இல்லை என்று அந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜயந்தி பாயி படேல் மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறிய கருத்து சர்ச்சைகளை ஏற்படுத்தியது. ஆனால், குஜராத் பல்கலைக்கழகம் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்தது.

### எசோதாபென்னுடன் திருமணம்

நரேந்திர மோடிக்கு 13 வயதாக இருந்தபோது, குடும்பத்தினர் அவருக்கு 11 வயதேயான எசோதாபென்னுடன் திருமணம் செய்து வைத்தார்கள். திருமணமான சில நாள்களில் மோடி வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். நரேந்திர மோடிக்கு திருமணமான விடயம் 2014 மக்களவைத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யும்போதுதான் உலகத்திற்கு தெரியவந்தது.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், மோடி பிரதமராக பதவி ஏற்ற பிறகு, அரசு நடைமுறைகளின்படி, எசோதா பென்னுக்கு பாதுகாப்பு வழங்கிய போது அவருக்கு சங்கடமாக இருந்தது. தான் பொதுப் போக்குவரத்தில் பயணிப்பவர் என்றும், பாதுகாப்பு பொலிஸாரின் வாகனங்கள் தனது பேருந்தை பின் தொடர்கின்றன எனவும் ஃபர்ஸ்ட் போஸ்ட் என்ற பத்திரிகைக்கு ஜசோதாபென் அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

### மோடியின் 'வக்கீல் குரு'

மோடியை ஆர்.எஸ்.எஸ் அமைப்பிற்கு

## தேநீர்க் கடையில் புகுந்து தேறி நாடாளுமன்றைப் பிடித்த 'சூரன்'!

கொண்டு வந்து சேர்த்தது வக்கீல் ஐயா என்று அனைவராலும் அழைக்கப்படும் லஷ்மணராவ் இமான்தார். அந்த காலகட்டத்தில் குஜராத்தில் ஆர்.எஸ்.எஸ் பிரசாரகராக இருந்தவர் அவர்.

எம்.வி.காமத் மற்றும் காலிந்தி ரண்டேரி எழுதிய 'Narendra Modi: The Architect of a Modern State' என்ற புத்தகத்தில், ஒருமுறை தீபாவளிக்கு மகன் வரவில்லை என்று மோடியின் பெற்றோருக்கு வருத்தமாக இருந்தது. ஏனெனில் அன்று அவரை ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் உறுப்பினராக சேர்த்து விட்டார் வக்கீல் ஐயா என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

1984ஆம் ஆண்டு வக்கீல் ஐயா இறந்துவிட்டாலும் அவரை மோடி மறக்கவேயில்லை. மற்றொரு ஆர்.எஸ்.எஸ் உறுப்பினரான ராயாபாயி நேனே என்பவரும் இணைந்து வக்கீல் ஐயாவைப் பற்றி 'சேதுபந்த்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார் நரேந்திர மோடி.

மோடியின் நல்லொழுக்கங்கள் தான் மற்றவர்களை அவரிடம் ஈர்த்தது. மூத்த பத்திரிகையாளர் ஜி. சாம்பத் இவ்வாறு கூறுகிறார்: ஆர்.எஸ்.எஸ்ஸில் சேர மோடிக்கு சிறுவயதில் இருந்தே ஆர்வம் இருந்தது. ஏனெனில், அங்கு ஒருவர் கட்டளையிடுவார், மற்றவர்கள் அனைவரும் அவருக்கு கீழ்படிவார்கள் என்பதுதான் காரணம் என்று மோடியின் மூத்த சகோதரர் சோமாபாய் கூறுகிறார்.

ஒரு காலத்தில் மோடிக்கு நெருங்கிய நண்பராக இருந்து பிறகு அரசியல் எதிரியாக மாறிய ஷங்கர் சிங் வகேலா இவ்வாறு கூறுகிறார், எந்தவொரு செயலையும் வித்தியாசமாக செய்வது மோடிக்கு பிடிக்கும். வழக்கமாக மற்றவர்கள் நீளமான சட்டை அணிந்தால், அவர் நீளம் குறைந்த சட்டை அணிவார். நாம் காக்கி நிற ஷார்ட்ஸ் அணிந்தால், அவர் வெண்ணிற உடையை தேர்ந்தெடுப்பார்.

### வாஜ்பேயின் மொபைல் அழைப்பு

2001, ஒக்டோபர் முதல் நாளன்று, விமான விபத்தில் உயிரிழந்த தனது பத்திரிகையாளர் நண்பரின் இறுதிச் சடங்கில் மோடி கலந்து கொண்டார். அப்போது, மோடியின் மொபைல் ஒலித்தது. பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி தான் மோடியை அழைத்தார். எங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டு பேச்சைத் தொடங்கினார் வாஜ்பேயி. அன்று மாலை இருவரும் சந்திப்பதாக முடிவானது.

மாலை ஏழு மணிக்கு ரேஸ்கோர்ஸ் சாலைக்கு மோடி சென்றபோது, அவரிடம் நகைச்சுவையாக பேசிய வாஜ்பேயி, நீங்கள் கொஞ்சம் அதிகமாகவே பெருத்து விட்டீர்கள். டெல்லியில் அதிக நாள் இருந்து விட்டதால் பஞ்சாபி உணவை சாப்பிட்டு எடை அதிகமாகிவிட்டது என்று நினைக்கிறேன். எனவே, குஜராத்திற்கு சென்று வேலை பாருங்கள் என்று அன்புக் கட்டளையிட்டார்.

கட்சியின் செயலாளராக குஜராத்தில் பணியாற்றும் பொறுப்பையும் கூடுதலாக கொடுப்பார்கள் என்று முதலில் மோடி நினைத்ததாக சொல்கிறார் எண்டி மரினோ. வாஜ்பாயின் அன்புக்கட்டளைக்கு தாழ்மையுடன் பதிலளித்த மோடி, தற்போது தான் கவனித்து வரும் மாநிலங்களின் பொறுப்பை பார்க்க முடியாதா என்று கேட்டார். கேபாயி படேலுக்கு பிறகு குஜராத்தின் அடுத்த முதலமைச்சராக மோடி பதவியேற்க வேண்டும் என்று பதிலளிக்கப்பட்டது. அதையும் தன்மையாகவே ஆனால் உறுதியாக மறுத்துவிட்டார் மோடி.

குஜராத்தில் கட்சியை சீரமைப்பதற்கு மாதத்தில் பத்து நாள்களை ஒதுக்கமுடியும்; ஆனால் முதலமைச்சராக பதவி வேண்டாம் என்று கூறினார் மோடி. வாஜ்பேயி அவரை சமாதானப்படுத்திய போதிலும் மோடி ஒத்துக்கொள்ளாததால், அத்வானி தொலைபேசி மூலம் நரேந்திர மோடியிடம் பேசி சமாதானப்படுத்தினார். அனைவரும் உங்களைத் தான் கை காட்டுகிறார்கள். பதில் பேசாமல், குஜராத்துக்கு சென்று பதவியேற்றுக்கொள்ளுங்கள் என்று அத்வானி இறுதியாக கூறிவிட்டார். வாஜ்பேயின் மொபைல் அழைப்பு வந்த ஆறாவது நாளான 2001, ஒக்டோபர் ஏழாம் திகதியன்று குஜராத் முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்டார் நரேந்திர மோடி.

குஜராத் கலவரங்கள், மோடியின் பெயரை களங்கப்படுத்தினாலும், பதவியேற்ற நான்கு மாதங்களிலேயே மோடியின் தலைமை கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அயோத்தியில் இருந்து கோத்ரா வுக்கு திரும்பிக் கொண்டிருந்த கர சேவகர்களின் ரயில் பெட்டியில் வைக்கப்பட்ட தீயில் 58 பேர் கொல்லப்பட்டனர். அடுத்த நாள், விஷ்வ இந்து பரிஷத், குஜராத் மாநிலத்தில் முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது.

(மிகுதி நாளை...)

### இலங்கையில் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் மதமோ நம்பிக்கையோ அற்றவர்கள்

21 ஏப்ரல் உயிர்ப்பு ஞாயிறன்று இலங்கையில் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் மதமோ நம்பிக்கையோ அற்றவர்கள் என்றும் அதனால் அவர்களது இறந்த உடல்கள் இஸ்லாமிய கல்லறைகளில் அடக்கம் செய்யப்படவில்லை என்றும் அனைத்து இலங்கை ஜமியத்துல் உலாமா அமைப்பின் தலைவர் முலாவி பரூத் பரூக் அவர்கள் கூறியுள்ளார் என்று ஆசிய செய்தி அறிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### உயிருக்குப் போராடும் இளையோர் அருள் பணியாளராக

துறவு சபையின் உறுப்பினரான மிக்கேல் லோஸ் என்ற இளந்துறவிக்கு தியாக்கோன் மற்றும் அருள்பணியாளர் என்ற இரு நிலைகளையும் ஒரே வேளையில் வழங்குவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சிறப்பான அனுமதி வழங்கியதையடுத்து லோஸ் அவர்களுக்கு திருப்பொழிவு நிகழ்ந்தது. லோஸ் அடிகளார் மருத்துவமனை படுக்கையில் ஆற்றிய முதல் திருப்பலியின்போது தனக்காகச்செபிக்கும் அனைவருக்கும் இறுதியில் நன்றி கூறினார்.

# இறைவனை சரியாக புரியாதவர்களே உயிர்ப்பு ஞாயிறன்று தாக்குதல்களை நடத்தியுள்ளனர்

## இளவாலை சென் யூட் பதியில் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார்



இளவாலை சென்யூட் பதியின் திருவிழாவில் மறை யுரையாற்றிய யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதிபி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் நாம் இறைவனை சரியாக புரிந்து கொள்ள புனிதர்கள் நமக்குத் துணை புரிகின்றனர். இவர்களில் முன்னுரிமை வகிப்பவர் புனித யூதா ததேயு ஆவார்.

இறைவனை சரியாக புரியாதவர்களே மற் றவர்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர். உயிர்ப்பு ஞாயிறு தின தாக்குதல்களும் அவ்வாறே எடுக்கப்பட வேண்டும். இறைவனை சரி யாக புரியாதவர்களே உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் தாக்குதல்களை நடத்தி இலங்கை மக்கள் வாழ்வை மீண்டும் கேள்விக் குறியாகியுள்ளனர்.

இது வேதனையானது. இலங்கை மக்களை அனைவரையும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. புனித யூதா ததேயு இறைவனிடம் இருந்து நேரடியாக விசுவாசத்தை பெற்று எமக்குத் தந்தார்.

அந்த விசுவாசத்திலே நாம் என்றும் ஒவ்வொருவரையும் புரிந்து அன்புணர்வுடன் வாழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். இளவாலை மறைக்கோட்ட முதல்வரும் பங்குத் தந்தையுமான எம்.இயேசுறட்ணம் அடிகளார் மேற்படி இளவாலை புனித யூதாததேயு பெருவிழா பற்றி தெரிவிக்கும் போது இளவாலையில் அருள்மழை பொழியும் கைவிடப்பட்வர்களின் பாதுகாவலர் புனித யூதாததேயு ஆலய பெரு விழாவை ஆயர் தலைமையில் கொண்டாட திட்டமிட்டு எல்லா ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தோம்.

ஆனால் எதிர்பாராத விதமாக நடைபெற்ற உயிர்ப்பு ஞாயிறு தின தாக்குதல்களால் உரியதினத்தில் மேற்படி விழாவை கொண்டாட முடியவில்லை. பின்னர் ஆயர் அவர்கள் ஏற்கனவே முடிவு செய்திருந்த திட்டங்களால் இளவாலை புனித யூதாததேயு பெரு விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

இளவாலை சென் யுட் ஆலயப் பங்குடன் மிக நெருக்கமான யாழ் ஆயர் கலந்து கொள்ளாதமை பங்கு மக்களுக்குகவலைதான். இருப்பினும் திருவிழாவை யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் கொண் டாடினோம்.– என்றார்.

# கிறிஸ்தவர்களிடம் மன்னிப்பு விழையும் இஸ்லாமியர்

இலங்கையில் நடைபெற்ற தாக்குதல்களுக்காக இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பில் மன்னிப்பை விழைந்து 14 மே 2019 அன்று இஸ்லாமிய கிறிஸ்தவ செய்தியாளர்கள் கூட்டம் ஒன்று இடம்பெற்ற வேளையில் இஸ்லாமியத் தலைவர் பரூக் அவர்கள் இவ்வாறு கூறினார். நடைபெற்ற தாக்குதல்களுக்கும் இஸ்லாமிய மத உணர்வை உண்மையாகக் கொண்டவர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. 2014ஆம் ஆண்டு இஸ்லாமிய அரசு என்ற பெயரில் ஐ.எஸ் ஐ.எஸ் என்ற அமைப்பு உருவான வேளையில் அந்த அமைப்பிற்கும் இலங்கை இஸ்லாமியர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை வெளிப்படையாக அறிவித்துள்ளோம்.

மெதடிஸ்ட் சபையின் ஆயர் ஆசிரி பெரேரா ஆண்டகை பேசுகையில்;

இஸ்லாமியர் அனைவருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் வழங்கும் ஒரே செய்தி மன்னிப்பு.

இந்த மன்னிப்பையே சிலுவையில் தொங்கிய இயேசுவும் வழங்கினார் என்றார். இலங்கை வாழ் இஸ்லாமியரைக் காப்பது கிறிஸ்தவர்களின் கடமை. எவ்வித வன்முறையையும் அவர்கள் மீது காட்டுவது தவறு என கிறிஸ்தவ சபையின் ஆயர் திலோராஜ் கனகசபை இக்கூட்டத்தில் விண்ணப்பித்தார்.

# ஜெபமாலை எனப்படுவது மே அல்லது ஒக்டோபர் மாதத்தில் மட்டும் ஜெபிக்கும் ஜெபமல்ல 365 நாளும் ஜெயிக்கலாம்



படித்ததில் பிடித்தது : குடும்ப ஜெபமாலை என கனடாவில் இருந்து அல்பிறட் ஞானராஜா அவர்கள் பகிர்ந்த ஆக்கத்தை மே செபமாலை மாத முடிவில் பலரின் நன்மை கருதி இங்கு தருகிறோம்:

இன்று வீட்டிலும் நாட்டிலும் நடக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் குடும்ப ஜெபமாலை இல்லாமல் போனதாகும். கடந்த பல ஆண்டுகளாக இவ்வளவு பெரிய அழிவுகள் அதுவும் நாம் முன்னர் கேள்விப் பட்டிராத அழிவுகள் ஏன் நடக்கின்றன?.

கத்தோலிக்கத்திலிருந்து பிரிந்து பல பிரிவினை வாதச் சபைகள் வந்ததற்கும் காரணம் குடும்ப ஜெபமாலை நின்றதுதான். முன்பெல்லாம் கத்தோலிக்க குடும்பங்களில் இரவு குடும்ப ஜெபமாலை சொல்லாமல் தூங்க மாட்டார்கள். வீட்டில் இருப்பவர்கள் ஒன்றாக அமர்ந்து ஜெபமாலை சொல்வார்கள். பல வீடுகளில் நற்செய்தி வாசித்து ஜெபமாலை ஜெபிப்பார்கள். ஜெபமாலை கத்தோலிக்க குடும்பங்களை மட்டுமல்ல உலகையே காப்பாற்றுகிறது.

ஜெபமாலை தனிப்பட்ட ஒருவருக்காக ஜெபிக்கப்படுவதில்லை. பரலோக மந்திரத்தில் – பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே – எங்கள் அனுதின உணவை தாரும்– எங்களை சோதனையில் விழவிடா தேயும் எனவும் மற்றும் அருள் நிறை மந்திரத்தில் – பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக – என்று ஜெபிக்கிறோம். அப்படி ஜெபிக்கும் போது நமக்காக மட்டுமல்ல உலகத்தில் உள்ள அத்தனை மக்களுக்காகவும் நாம் ஜெபிக்கிறோம். அது தான் ஜெபமாலையின் சிறப்பு மிக்க சக்தி எனப்படும்.

ஏன் குடும்ப ஜெபமாலை நின்று போனது? வீட்டிற்குள் நுழைந்த ரி.வி என்ற சாத்தானால் அதிலும் தனியார் சானல்கள் வந்த பின்புதான் இத்தகையை இழிவான நிலையை நாம் சந்தித்துள்ளோம். 24 மணி நேரமும் படங்கள், தொடர்நாடகங்கள், பாடல்கள், சீரியல்கள், ஆன்மாக்களைக் கெடுக்கும் பிக்பாஸ் போன்ற நிகழ்ச்சிகள்.

இவ்வாறான நிகழ்ச்சிகள் ஆன்மாக்களைக் கெடுத்து குட்டி சுவராக்காதா? குழந்தைகள், சிறுவர், சிறுமிகள், இளைஞர்கள் நிலையை எண்ணிப் பாருங்கள். அவர்கள் ஆன்மாக்களில் விஷங்களை விதைக்கின்றன. குடும்ப உறவுகளை சீரழிக்கின்றன. கத்தோ

வர லாற்றை திரும்பிப்பார்க்க வேண்டும். மாலை நேரங்களில் ஜெபமாலை ஜெபித்தல் எதற்காக மறைந்து போகிறது?.

உங்கள் குடும்பங்களில் குடும்ப ஜெபமாலையை ஆரம்பித்துப் பாருங்கள். சில நாள்களில் அல்லது சில மாதங்களில் உங்களுக்கே மாற்றம் தெரியும்.

ஜெபமாலை எனப்படுவது மே அல்லது ஒக்டோபர் மாதம் மட்டும் ஜெபிக்கும் ஜெபமல்ல மாறாக, வருடத்தின் 365 நாள்களும் ஜெபிக்கப்பட வேண்டிய ஜெபம். ஜெபமாலை செபித்தல் எனப்படுவது நம்மையும் உலகையும் ஏற்படும் அழிவிலிருந்து காப்பாற்றும் ஆயுதம்.

## கியுடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ்.இயுஜின் பிரான்சீஸ் அடிகளார் தலைமையில் அஞ்சலி நிகழ்வு



21 ஏப்ரல் உயிர்ப்பு ஞாயிறன்று இலங்கையில் நடந்த தாக்குதல்களில் உயிர் இழந்தவர்களுக்கான அஞ்சலிக்கூட்டம் கியுடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ்.இயுஜின் பிரான்சீஸ் அடிகளார் தலைமையில் அனைத்து சமயத் தலைவர்களையும் இணைத்து நடத்திய போது எடுக்கப்பட்ட படத்தை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் பார்வைக்கு தருகிறோம்.

# பிணங்களைத் தகனம் செய்யும் முறையில் எத்தனை ரகம்

ஆன்மாவானது உடலை விட்டு பிரியும் நிகழ்வுதான் மரணம் என்று அழைக்கப்படுகிறது.

இறந்தவுடன் உடலுக்கு செய்யப்படும் இறுதி மரியாதைகளும், சடங்குகளும் அவர்கள் மறுவுலகில் மகிழ்ச்சியாய் வாழ வேண்டும் என்பதற்காக செய்யப்படுகிறது எனக் கூறப்படுகிறது.

இறப்பிற்கு பிறகும் வாழ்க்கை இருக்கிறது என்பது அனைவராலும் நம்பப்படும் ஒரு நம்பிக்கையாகும். இன்று உலகம் முழுவதும் பிணங்களை தகனம் செய்ய ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு முறை உள்ளது. ஆனால் பண்டைய காலத்தில் ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு கலாசாரத்திற்கும் கூட வெவ்வேறு முறைகள் இருந்தன. அதில் சில முறைகள் நம்மை அதிர்ச்சியடைய வைப்பவையாகவும் இருந்தன. இந்த பதிவில் பண்டைய காலகட்டத்தில் பிணங்களை தகனம் செய்ய பின்பற்றிய வித்தியாசமான வழிமுறைகள் என்னென்ன என்று பார்க்கலாம்.

**மம்மி**

மம்மி இந்த முறை உலகம் முழுவதும் மிகவும் புகழ்பெற்றதாகும். இந்த முறை தகனத்தில் உயர்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு என்று தனியிடம் ஒதுக்கப்படும். பதப்படுத்துவதை தொடங்குவதற்கு முன் அவர்கள் உடலில் இருக்கும் அனைத்து பாகங்களும் எடுக்கப்பட்டுவிடும் மூளை உட்பட. அதன்பின் உலர்ந்த பொருள்களால் உடல் நிரப்பப்படும் பின்னர் கயிறு கொண்டு சுற்றப்படும். ஐந்தாம் முறையில் அடக்கம் செய்வது அவர்களின்





ஆன்மாவை மறுவுலக பயணத்திற்கு பாதுகாக்கும் என்று நம்பினார்கள். இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் பழமையான மம்மி என்றால் அது 6000 BC தான்.

**கிரயோனிக்ஸ்**

கிரயோனிக்ஸ் கிர யோனிக்ஸ் என்பது மிகவும் குறைந்த வெப்பநிலையில் மனிதர்களையும், விலங்குகளையும் பதப்படுத்தும் ஒரு முறையாகும். இதை இப்போதிருக்கும் மருந்துகளால் கூட சாதிக்க முடியாது. இவ்வாறு பதப்படுத்த காரணம் எதிர் காலத்தில் மீண்டும் மறுபிறப்பு எடுக்க வாய்ப்புள்ளது என்ற நம்பிக்கையில் தான்.

**பிளாஸ்டினேன்**

பிளாஸ்டினேன் அழிவில்லாதனையில்லாத, கெட்டுப்போகாத நெகிழ்வான பொருள்கள் கொண்டு மாற்றியமைக்கப்படும்.

**கப்பல் தகனம்**

மரணத்திற்கு பிறகு அதிக செல்வம் உள்ளவர்கள் கப்பலில் வைக்கப்பட்டு உணவு, நகை, ஆயுதம் சிலசமயம் வேலைக்காரர்கள், செல்லப் பிராணிகளுடன் சேர்த்துக் கரையில் வைத்து தீயிட்டு தண்ணீருக்குள் அனுப்பி விடுவார்கள். இந்த பழக்கம் பண்டைய கால இந்தியாவிலும் இருந்தது.



**மர தகனம்**

மர தகனம் ஆஸ்திரேலியா, பிரிட்டிஷ் கொலம்பியா, தென்மேற்கு அமெரிக்கா மற்றும் சைபீரியா போன்ற நாடுகளில் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்தது. உடலை இறுக்கமாக துணியால் சுற்றி மரத்தில் சிதைவடையும்படி தொங்க விடுவார்கள்.

வாழ்க்கை மீதிருந்த நம்பிக்கையால் இந்த முறையில் உடலும், உடல் உறுப்புகளும் பதப்படுத்தப்பட்டு வந்தன. உடலில் இருக்கும் தண்ணீரும், கொழுப்பும் சில பிளாஸ்டிக் பொருள்கள், வாச

**டவர் ஒவ் சைலன்ஸ்**

ஜெரோஸ்ட்ரியன்ஸ் மக்கள் இறந்தவர்களின் உடல் தரை, மக்கள் என எதையும் தொடக்கூடாது என்று கூறுவார்கள், நெருப்பை கூட தீண்டக்கூடாது என்று நினைத்தார்கள். அதனால்தான் அவர்கள் டவர் ஒவ் சைலன்ஸ என்னும் அமைப்பை உருவாக்கினார்கள். பொதுவாக மலைப்பகுதிகளில் கோபுரம் போன்ற அமைப்பில் விலங்குகள் வரக்கூடிய இடத்தில் இதனை அமைத்து விடுவார்கள். எலும்புகள் காய்ந்து போனவுடன் அதனை எடுத்து அப்புறப்படுத்தி விடுவார்கள்.

## உடலை சிறுசிறு துண்டுகளாக வெட்டி பறவைகள், விலங்குகளுக்கு இரையாக்கல்

**நரமாமிசம்**

நரமாமிசம் சில கலாசாரங்களில் இறந்தவர்களை கௌரவப்படுத்தும் சிறந்த வழியாக இருப்பது அவர்களை உண்பதுதான். இதனை நரமாமிசம் உண்பது என்று கூறுவார்கள். இந்த மாதிரி உண்பது இறந்தவர்களுக்கும், உயிரோடு இருப்பவர்களுக்கும் இருக்கும் உறவை ஒன்றிணைக்கும் என்று நம்பப்பட்டது.

மரணம் மற்றும் அதன் துன்பகரமான பின்விளைவுகளுடன் தொடர்புடைய வெறுப்பு மற்றும் அச்சத்தை வெளிப்படுத்த இது ஒரு முரட்டுத்தனமான வழியாகும்.

**வான் தகனம்**

வான் தகனம் ஓர் இறந்த உடலை காப்பாற்றவோ அல்லது நினைவுகூறவோ பௌத்தர்களுக்கு விருப்பமில்லை, அவர்களை பொறுத்தவரை ஒரு காலிபாத்திரம் ஆகும். வான் தகனம் என்பது உடலை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி அதனை பறவைகளுக்கு கொடுத்து விடுவார்கள் மிஞ்சுவதை மிருகங்களுக்கு கொடுத்து விடுவார்கள்.

திபெத் புத்த மதத்தினர் வான் தகன முறையை பின்பற்றினார்கள், 1000 ஆண்டுகளுக்கு முன்புவரை கூட



இதனை பின்பற் றினார்கள்.

**விரலை நீக்கும் சடங்கு**

விரலை நீக்கும் சடங்கு ஒரு வேளை பிடித்தவர்களின் இறப்பானது அதிர்ச்சிகரமானதாக இருந்தால் டானி மக்கள் இறந்தவர்களின் விரலை எடுத்து வைத்துக்கொள்வார்கள். குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் இந்த சடங்கு



மிகவும் கொடூரமானதாக இருக்கும்.

இந்தச் சடங்கானது ஆவிகளை விரட்டவும், இறந்தவர்களை மகிழ்ச்சிப் படுத்தவும் உதவுகின்றதாம்.

**புதைப்பது**

புதைப்பது இது சுற்றுசூழலுக்கு மிகவும் ஏற்ற பிணங்களை அப்புறப்படுத்தும் முறையாகும். இந்த செயல்முறையில் மனித உடல் சிதைந்து மண்ணுக்கு சிறந்த உரமாக மாறுகிறது, இதனை அகுவாமேன் என்றும் கூறுவார்கள்.

# நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமகன் நெல்சன் மண்டேலா

நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு, நான் ஜனாதிபதியான பின் ஒருநாள் நான் எனது முதல் கட்ட பாதுகாப்புப் படையினருடன் நகரத்தில் உள்ள ஓர் உணவகத்துக்குச் சென்றிருந்தேன்.

அங்கு ஒரு உணவகத்தில் எல்லோரும் அமர்ந்தோம். அவரவர் தமக்கு விரும்பிய உணவுக்கு 'ஓடர்' கொடுத்து விட்டு அமர்ந்திருந்தோம். அப்போது எனக்கு எதிர் மேசையை கவனித்தேன்.

ஒருவர் தனியாக உணவுக்காகக் காத்திருந்தார்.. எனது படைவீரனை அனுப்பி, அவரை எம்முடன் வந்து ஒன்றாக உணவருந்தும் படி சொன்னேன். அவரும் தனது உணவுடன் எமது வட்டத்தில் வந்து அமர்ந்து கொண்டார்.. எல்லோரும் உண்டு முடிய அவரும் புறப்பட்டார்.

எனது படை வீரன் என்னிடம் சொன்னான்..... அந்த மனிதர் பார்ப்பதற்கு மிகவும் நோய்வாய்ப் பட்டவராகத்



தெரிகிறார். அவர் உண்ணும் போது கைகள் மிகவும் நடுங்கின என்றான்..

நான் குறுக்கிட்டேன்..... அது அல்ல உண்மை. வீரனே....!!

உண்மை என்ன தெரியுமா......!!

நான் முன்னர் சிறையில் இருந்த போது, இந்த மனிதர்தான் எனக்கு சிறைக் காவலராக இருந்தார். என்னை அடிக்கடி கொடுமைப் படுத்திக் கஷ்டப்படுத்தும் போதெல்லாம்....

நான் கூக்குரலிட்டு, களைத்து, இறுதியில் கொஞ்சம் நீர் அருந்தக் கேட்பேன்..

இதே அந்த மனிதர், அவ்வேளை என்னிடம் வந்து நேராக என் தலை மேல் சிறுநீர் கழித்துவிட்டுச் செல்வார். இப்போது அவர் என்னை இனம் கண்டு கொண்டார். நான் இப்போது தென் ஆபிரிக்க அதிபராக இருப்பதால், அவருக்குப் பதிலடி கொடுப்பேன் என்று நடுக்கத்துடன் எதிர்பார்த்தார்....

ஆனால் இது எனது பழக்கமல்ல. இப்படிப்பட்ட குணம் எனதுமல்ல..

பழிக்குப் பழி வாங்கும் மனநிலை ஒரு போதும் ஒரு தேசத்தையோ, தனி மனிதரையோ தட்டியெழுப் பாது. அழித்து விடும். அதே நேரம் சில விஷயங்களில் மனதின் சகிப்புத் தன்மை, பெரிய சாம்ராஜ்யங்களையே உருவாக்கும் என்றார் மண்டேலா.

# வெற்றியுடன் தொடங்கியது மகிழ்ச்சிதான்

## உற்சாகத்தில் இங்கிலாந்து கப்டன்



உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி தொடரை வெற்றியுடன் தொடங்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று இங்கிலாந்து கப்டன் இயன் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடந்து வரும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் லீக் போட்டியில், இங்கிலாந்து அணி 104 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்காவை வீழ்த்தியது. அரைச்சதம் விளாசியதுடன், விக்கெட்டுகளை வீழ்த்தி, அபாரமான கேட்ச் பிடித்த இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

இந்நிலையில், வெற்றி குறித்து பேசிய இங்கிலாந்து கப்டன் இயன் மோர்கன் கூறுகையில்–

இந்த ஆட்டத்தில் நாங்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டோம். நாங்கள் பெரிய ஸ்கோர் குவிக்க விரும்பினோம்.

ஆடுகளத்தின் தன்மை எங்களது திட்டத்தைச் செயல்படுத்த அனுமதிக்கவில்லை. இருப்பினும் அனுபவத்துடன் கூடிய சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். இத்தகைய ஆட்டத்தை விளையாட கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

பென் ஸ்டோக்ஸ் துடுப்பாட்டம், பந்துவீச்சு மட்டுமின்றி களத்தடுப்பிலும் சிறப்பாகச் செயல்பட்டார். பெலக்வாயோ அடித்த பந்தை பென் ஸ்டோக்ஸ் அருமையாக பிடி எடுத்தார். அவர் மற்ற வீரர்களுக்கும் உத்வேகம் அளிக்கக்கூடியவர்.

எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசினர். போட்டி தொடரை வெற்றியுடன் தொடங்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது' என தெரிவித்துள்ளார்.

# அதிரடி ஆட்டத்தால் வெல்ல முடியாது!




இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் பேட்டியில் அதிரடி ஆட்டத்தால் வெற்றி பெற முடியாது என இலங்கை துடுப்பாட்டகாரர் லஹிரு திரிமான்ன குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ணம் தொடர்பான நேர்காணலில் பேசிய திரிமான்ன, ஒருநாள் போட்டிகளில் அதிரடியாக விளையாடுவதன் மூலம் விரைவாக ஓட்டங்கள் சேர்ப்பது இப்போது வழக்கமாகிவிட்டது.

இதன் காரணமாக 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டிகளில் 300 ஓட்டங்களுக்கு குறைவான ஓட்டங்கள் பெறுவது அரிதான விடயமாக மாறியிருக்கிறது.

எனினும், அடித்தாடும் உக்திகள் இந்த ஆண்டு உலகக் கிண்ணத்தில் வெற்றிக்கான வழியாக இருக்காது என திரிமன்ன குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாள் போட்டிகளில் விளையாட 50 ஓவர்கள் இருக்கிறது. இது ஒரு நீண்ட போட்டி, 300 பந்துகளை நாம் சந்திக்க வேண்டும் என திரிம ன்ன தெரிவித்துள்ளார். மேலும் பேசிய அவர், இந்த உலகக் கிண்ணத்தில் எந்த புதுவிதமான ஷாட்களையும் நான் முயற்சி செய்யவில்லை. எனது போட்டித் திட்டங்களுடன் மாத்திரம் இருக்கின்றேன். ஆனால், சந்தர்ப்பங்கள் கிடைத்தால் புது ஷாட்களை விளையாடுவேன் என தெரிவித்துள்ளார்.




# திமுத்துக்கு ஆலோசனை வழங்கிய சங்கக்கார!

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான்களான அர்ஜுன ரணதுங்க, குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன ஆகியோர் அணியின் தற்போதைய தலைவரான திமுத் கருணாரத்னவுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளனர்.

இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான்கள் உலகக்கிண்ண தொடரில் எவ்வாறு விளையாட வேண்டுமென்பது குறித்து அணிக்கு ஆலோசனைகள் வழங்கினர் எனத் திமுத் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களின் ஆலோசனைகளை களத்தில் செயற்படுத்துவோம் என்றும், இந்த ஆலோசனைகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குமார் சங்கக்கார தற்போது நடைபெற்றுவரும் உலகக்கிண்ண தொடரில் கிரிக்கெட் வர்ணனையாளராகச் செயற்படுகிறார். மஹேல ஜயவர்தன தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# புலம்புகிறார் பாகிஸ்தான் அணித் தலைவர்

மேற்கிந்திய தீவு அணிக்கெதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்த நிலையில், மோசமான சாதனை ஒன்றையும் படைத்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கிண்ணத் தொடருக்கான நேற்று முன்தினம் போட்டியில் பாகிஸ்தான்-மேற்கிந்திய தீவு அணிகள் மோதின.

அதன்படி முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, மேற்கிந்திய தீவு அணியின் பந்து வீச்சைதாக்குப் பிடிக்க முடியாமல் 105 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அடுத்து ஆடிய மேற்கிந்தியத் தீவு அணி 13.4 ஓவரிலே 108 ஓட்டங்களைக் குவித்து அபார வெற்றி பெற்றது.




இதற்கு முன் பாகிஸ்தான் அணி 1992-ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 74 ஓட்டங்கள் எடுத்தது. அதன் பின் 1999 உலகக்கிண்ணத்தில் ஆஸ்திரேலியா அணிக்கெதிராக 132 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில் இந்த உலகக்கிண்ணப் போட்டியில் 105 ஓட்டங்கள் எடுத்து அடுத்து ஒரு மோசமான சாதனையை பாகிஸ்தான் படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் தோல்விக்கு முக்கிய காரணமே துடுப்பாட்டக்காரர்கள்தான் என்று பாகிஸ்தான் அணியின் தலைவர சர்பிராஸ் அகமது கூறியுள்ளார்.



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தமீம் இக்பால், உலகக்

# பங்களாதேஷுக்கு பேரிழப்பு

கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஆரம்ப போட்டியில் விளையாடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இடது கையில் உபாதைக்குள்ளாகியுள்ள தமீம் இக்பால் இன்று லண்டன்-ஓவல் கெனிங்டன் மைதானத்தில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்கா அணிக்கெதிரான போட் டியில் விளையாடுவது கேள்விக்குறியாகி யுள்ளது.

நேற்று முன் தினம் துடுப்பாட்ட வலைப் பயிற்சியின்போது, தமீம் இக்பாலுக்கு, இடது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து உடனடியாக ஓய்வறை விரைந்த அவர், அங்கு மருத்துவர்களின் ஆலோசனைப்படி எக்ஸ்ரே செய்து கொண்டார்.

ஆனால் எக்ஸ்ரே மருத்துவ அறிக்கையில், அவருக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை எனத் தெரியவந்தது.

எனினும், ஏற்கனவே இந்தியா அணிக்கெதிரான பயிற்சிப் போட்டியின் போது வலியுடன் விளையாடியதன் காரணமாக மேலும் ஒரு மருத்துவப் பரிசோதனை செய்யப்படவுள்ளது.

இந்த மருத்துவப் பரிசோதனைக்கு பின்னர், அவர் உடற்தகுதியுடன் இருந்தால் மட்டுமே தென்னாபிரிக்கா அணியுடனான போட்டியில் இணைவார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

(ஐ)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் திட்டமிட்டமை போன்று நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்த பிரதமர் ரணில், ஹெலிஹொப்டரில் யாழ். நகரை வந்தடைந்தார்.

பிரதமர் யாழ்ப்பாணம் வருவதற்குச் சற்று முன்னர் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றமையால் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பான நிலைமை ஏற்பட்டதாக அறிய கிடைத்தது.

நேற்று மாலை பலாலி இராணுவ முகாமில் சிரமதான நடவடிக்கையில் இராணுவ அணி ஒன்று ஈடுபட்டிருந்தது என்றும் இதன்போதே குண்டுவெடிப்பு நடந்தது என்றும் இராணுவத் தரப்பு தெரிவித்தது.

சிரமதானப் பணியின்போது கல் ஒன்றை நான்கு இராணுவச் சிப்பாய்கள் இணைந்து அகற்ற முற்பட்டனர். அவ்வேளை கல் அருகே புதைக்கப்பட்டிருந்த அமுக்க கண்ணிவெடி எதிர்பாராத நிலையில் வெடித்துள்ளது.

இந்த வெடி விபத்தினால் சம்பவ இடத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என இராணுவத் தரப்புக்கள் தெரிவித்தன.

இந்தக் குண்டுவெடிப்பு குறித்து இராணுவப் பொலிஸாரும், பலாலி பொலிஸ் நிலைய அதிகாரிகளும் இணைந்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

பிரதமரின் யாழ்ப்பாண வருகையை ஒட்டி குடாநாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-07)

## பஸ்ஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் கிளிநொச்சி இரணைமடுச் சந்திக்கு அருகாமையில் 247 கட்டைப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி ஊற்றுப்புலத்தைச் சேர்ந்த குமார் டனுசன் (வயது–19, கந்தசாமி கஜானன் (வயது–19) ஆகிய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் பயணித்த பஸ்ஸுக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து பஸ்ஸுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது. அதில் பயணித்த இருவரும் உயிரிழந்தனர். இவர்கள் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலக்கத்தகடு பொருத்தப்படாத புத்தம் புதிய மோட்டார் சைக்கிளே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இவர்களது சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜனவின் தேசிய சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின்போது ஜனாதிபதி வேட்பாளர் விவரம் அறிவிக்கப்படும். ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அறிவிக்குமாறு அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலும் கட்சித் தலைவர்கள் என்னிடம் வலியுறுத்தினர். தமது வேட்பாளர் யார் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் அறிவிக்கவில்லை. எனவே, உரிய நேரத்தில் உரிய வகையில் எமது தரப்பு அறிவிப்பு வெளியாகும் – என்றார். (ஐ)

## நேற்று மாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பிரதமரை இராஜாங்க அமைச்சர் விஜயகலாவும், யாழ் மேயர் இ.ஆனல்ட்டும் வரவேற்றனர்.

இரண்டு நாள்கள் விஜயமாக யாழ்ப்பாணம் வந்துள்ள அவர், இங்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். (ஐ-07)

## பதவி துறக்கிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீனுக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் என்றும், 19ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்தப் பிரேரணை விவாதத்துக்கு வருவதற்கு முன் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பதவி துறப்பார் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுயாதீன விசாரணைகளுக்கு இடமளித்து அமைச்சர் ரிஷாத் பதவி துறக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலரும் வலியுறுத்திவருகின்றனர்.

இந்த நிலையில் அத்துரலிய ரதன தேரரும் போராட்டத்தில் குதித்துள்ளார். இதனால், அரசுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே, கட்சித் தலைமையின் ஆலோசனையின் பிரகாரம் ரிஷாத் பதவி துறக்க உள்ளார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இருந்து வந்த சிலரே யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்துக்கு இவ்வாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக, கட்சியின் வாலிபர் முன்னணியின் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பதை போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை எனக் குற்றம் சாட்டினர்.

இலங்கை அரசின் சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோடி ரூபா பணத்துக்கு விலை போய்விட்டனர். இவர்கள் மக்கள் நலனில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எனவே இவர்கள் பதவிகளைத் துறக்கவேண்டும் என வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணாமல் போனோர் தொடர்பில் அரசுடன் கதைக்க ஏன் தயக்குகின்றீர்கள்?, உங்களால் தீர்வு பெற இயலாது என்றால் புதிய தலைமுறைக்கு வழிவிடுங்கள், ஏன் போர்க் குற்றவாளிகளைப் பாதுகாத்து கால அவகாசம் கொடுத்தீர்கள் போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபடடனர். (ஐ-07)

# ராஜிதவிற்கு மீண்டும் முக்கிய பொறுப்பு!

கொழும்பு, ஜூன் 02

உலக சுகாதார நிறுவனத்தின் துணைத் தலைவராக அமைச்சர் ராஜித சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெனீவாவில் நடந்த கூட்டத்தில் இரண்டாவது முறையாகவும் ராஜித இந்தப் பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்டார்.

194 உறுப்பு நாடுகளின் 35 நிறைவேற்றுகுழு உறுப்பினர்கள் கூடி இந்த முடிவை எடுத்தனர். ஜெனீவாவிலிருந்து நேற்று அதிகாலை ராஜித நாடு திரும்பினார். அவருக்கு விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

## பதவியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிஷாத் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யத் தேவையில்லை யென்று பிரதமர் ரணில் மற்றும் அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன உட்பட்ட பலர் தெரிவித்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தேரரின் உண்ணாவிரதம் குறித்து பல தரப்புக்கள் ஜனாதிபதியிடமும் கூறியுள்ளதால் அமைச்சரைப் பதவி விலகுமாறு கேட்க ஜனாதிபதி தரப்பும் தயாராகி வருகின்றது.

ஆனால் எந்தக் காரணம் கொண்டும் அமைச்சுப் பதவியை துறக்கவேண்டாமென அமைச்சர் ரிஷாத்தைப் பிரதமர் ரணில் மற்றும் அமைச்சர்கள் மங்கள, ராஜித உட்பட பலர் கேட்டுள்ளனர்.

இதனால் இந்த நெருக்கடி நிலைமை முற்றி அரசியல் பிரச்சினையாக மாறும் நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஐ)

## வெளிநாட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் பதவியில் இருக்கும் வரை இந்த விடயம் இடம்பெறாது என அவர் நேற்றுத் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து வெளிநாட்டுப் படைகள் இலங்கைக்குள் வர முயற்சிப்பதாகத் தகவல்கள் வெளியாகின.

இதனையடுத்து அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்கர்கள் மற்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இணைந்து வெளிநாட்டுப் படைகளை இலங்கைக்குள் அனுமதிக்கவேண்டாம் என நேற்று முன் தினம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே இது குறித்து வெளியாகும் செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஜனாதிபதி இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். (ஐ)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனத் தூதரகம் இலங்கைக்கான அதன் பயண அறிவுறுத்தலை மேலும் திருத்தம் செய்து 'முன்னெச்சரிக்கையாகச் செயற்படவேண்டும் என்று சீனர்களை அறிவுறுத்தியிருக்கின்றது என்று சீன அரச செய்தி நிறுவனமான சின் ஹூவா செய்தி வெளியிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து தீவிரவாத சக்திகளுக்கு எதிராகக் கடுமையான, பரந்தளவிலான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கிறது. பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் கடைத்தொகுதிகள் போன்ற பொது இடங்களில் பாதுகாப்புக் கடுமையாகப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறியிருக்கும் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம், பாதுகாப்பு நிலவரம் இலங்கையில் இன்னமும் வழமை நிலைக்குத் திரும்பவில்லையென்று குறிப்பிட்டிருக்கிறது. திருத்தியமைக்கப்பட்ட இந்தப் பயண அறிவுறுத்தல் ஜூன் 21 வரை நடைமுறையிலிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைகளை எழுத்து மூலம் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்தனர். (ஐ)

## உண்ணாவிரதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடல் சோர்வடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

போராட்டத்தில் ஈடுபடும் அவரைப் பார்க்க அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் திரண்டு வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

அத்துரலிய ரதன தேரரின் போராட்டத்துக்கு ஆதரவாக மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், அம்பிட்டிய சுமங்கள தேரர் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனி அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே கிரியெல்ல இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது முட்டாள் தனத்தினால், எமக்கு எதிரான தரப்பினரையும் நாம் இணைத்துக்கொண்டோம். இவர்கள்தான் எமக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். அனைத்து செயற்பாடுகளின்போதும் எம்மை வீழ்த்தினார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினரால் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ள முடியாத நிலைமை கடந்த காலங்களில் ஏற்பட்டது.

எனினும், ஒக்ரோபர் மாத அரசியல் சூழ்ச்சிக்குப் பின்னர், தற்போதைய நிலைமையில் எமக்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசொன்றை அமைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, அடுத்த பொதுத் தேர்தலுடன் நாம் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசொன்றையே அமைப்போம் என்பதை இங்குக் கூறிக்கொள்கிறேன் – என்றார். (ஐ)

## அத்துரலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு உடனடியாக நிறைவேற்றினால், சைவத்தமிழர்கள் இலங்கை அரசை பாராட்டுவார்கள் எனத் தெரிவித்திருக்கிறார் சிவசேனையின் மறவன்புலவு க.சச்சிதானந்தன்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை சிவபூமி. திருமூலர் அன்றே கூறினார். புத்தர்கள் சிவபூமியை மதித்து நடக்கிறார்கள். புத்த விகாரைகளில் சிவனுக்கும் இடமுண்டு. சைவக் கடவுளருக்கும் இடம் உண்டு.

400 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைகுள் வலிந்து புகுந்த கிருத்தவ மதம் சைவர்களையும் புத்தர்களையும் ஏளனம் செய்தது சைவக் கோயில்களும் புத்த விகாரங்களும் சாத்தானின் இருப்பிடங்கள் என வலிந்து கூறினர். பீரங்கி முனையில், துப்பாக்கி முனையில், வாள் முனையில் சைவர்களையும் புத்தர்களையும் கிறிஸ்தவர்கள் ஆக்கினர்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயரோடு புகுந்த முகமதியர்கள் தொடக்கத்தில் இந்த மண்ணின் மரபுகளை மதித்து உள் புகுந்தனர். படிப்படியாக மண்ணின் மரபுகளை இழித்துப் பேசத் தொடங்கினர். அண்மைக் காலங்களில் மிதித்து நடக்க முற்படுகின்றனர்.

சிவ பூமியில் இருந்த காளி கோயிலை அகற்றினேன், அந்த இடத்தில் முகமதியர் வழிபாட்டிடம் கட்டினேன், மசூதி கட்டினேன், அதற்காக அமைச்சர் அதிகாரத்தைப் பயன்படுத்தினேன் என்ற பொருள்பட இன்றைய கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா கூறிய சொற்கள் அவர் இலங்கை அரசில் எந்தப் பதவியையும் வகிக்கத் தகுதியற்றவர் என்பதையே எடுத்துக் காட்டின.

முசலிப் பிரிவில் சிவபூமிக்குள்ளே அடாத்தாகக் காடுகளை வெட்டி ஆயிரத்துக்கும் அதிகமான முகமதியரைக் குடியேற்றியவர் ரிசாத் பதியுதீன்.

முல்லைத்தீவில் சில ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் கையகப் படுத்தி அங்கு முகமதியரைக் குடியேற்ற ரிசாத் பதியுதீன் முனைந்த பொழுது வடமாகாண சபை தலையிட்டுத் தடுத்தது.

சிவபூமியில் மாட்டிறைச்சிக் கடை கூடாது எனச் சைவர்கள் களம் இறங்கிய பொழுது உள்ளூராட்சி அமைப்புக்கள் தீர்மானங்கள் இயற்றிய பொழுது உள்ளூராட்சித் தலைவர்களை மிரட்டியவர் பதியுதீன்.

ஹிஸ்புல்லாவும் ரிசாத் பதியுதீனும் அரசுப் பதவிகளில் இருப்பதால் சைவர்களுக்கு வேண்டாததைச் செய்கிறார்கள் என்ற முறைப்பாடு வடக்கே கிழக்கே மலையகத்திலே நெடுங் காலமாக உண்டு.

கிழக்கு மாகாணச் சைவத் தமிழர்கள் ஒன்றிணைந்து ஹிஸ்புல்லா பதவி விலக வேண்டும் என ஒரு நாள் முழுவதும் கடையடைப்பு நிகழ்த்தியதை மறக்க முடியாது.

கண்டியில் தலதா மாளிகையில் வணக்கத்துக்குரிய அத்துரலிய ரதன தேரர் காலவரையற்ற உண்ணா நோன்பு இருக்கிறார். சைவத் தமிழர்களாகிய நாங்கள் எதை இந்நாள்வரை கோரிக்கையாகவைத்திருந்தோமோ அதையே புத்தத் தேசியவாதியான வணக்கத்துக்குரிய தேரரும் வைத்திருக்கிறார் – களத்தில் இறங்கி போராடுகிறார்.

வணக்கத்துக்குரிய அத்துரலிய ரதன தேரர் பெருமானின் கோரிக்கைகளில் நியாயம் உண்டு. நீதி உண்டு. இலங்கை அரசு செவி சாய்க்க வேண்டும். அவரது கோரிக்கைகளை நிறைவேற்றி இலங்கைத்தீவின் மண்ணின் மரபுகள் பேணுவோரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

வணக்கத்துக்குரிய தேரின் கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கைகளை எடுத்தால் இலங்கையைச் சிவபூமியாக கொண்டு வாழ்கின்ற சைவத் தமிழர்கள் இலங்கை அரசைப் பாராட்டுவார்கள்.

வணக்கத்துக்குரிய அத்துரலிய தேரரும் அவரது அருமைத் தொண்டர்களும் புத்த தேசியத்தை முன்னெடுத்து மண்ணின் மரபைப் பேண விழைகிறார்கள்.

இந்த வரலாற்று முயற்சியில் புத்த சிங்கள மக்களுக்கு உறுதுணையாக இந்த மண்ணின் மரபுகளைப் பாதுகாத்துப் பேணிக் காக்க விரும்புகின்ற சைவத் தமிழர்கள் இருப்பார்கள் – என்றுள்ளது. (ஐ)

# ரிஷாத், அசாத் சாலி, ஹிஸ்புல்லாவுக்கு ஒரு மாதம் கட்டாய விடுமுறை வழங்குக!



## வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் கருத்து

கொழும்பு, ஜுன் 02

மாகாண ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லா, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோருக்கு ஒரு மாதம் கட்டாய விடுமுறை வழங்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுச் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் அது இன்னும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இந்தநிலையில் அசாத் சாலி, ஹிஸ்புல்லா, ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வரும் நிலையிலேயே வடக்கு ஆளுநர் இவ்வாறு கூறியுள்ளார். (ஐ)

# வியாழேந்திரனுடன் போராட்டத்தில் நேற்று இணைந்தார் சுமங்கள தேரர்!




மட்டக்களப்பு, ஜுன் 02

மட்டக்களப்பு மங்களாராம விகாராதிபதி அம்பிட்டிய சுமங்கள தேரர் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக உண்ணாவிரதப்போராட்டத்தில்ஈடுபட்டுள்ள அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவாக மட்டக்களப்பு, காந்திபூங்காவுக்கு முன்பாக நேற்றுச் சனிக்கிழமை காலை 7 மணியளவில் வியாழேந்திரன் எம்.பி. இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார். அந்தப் போராட்டத்தில் சுமங்கள தேரரும் பங்கெடுத்துள்ளார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், மாகாண ஆளுநர்களான ஹிஸ்புல்லாஹ் மற்றும் அசாத் சாலி ஆகியோர் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துரலிய ரத்ன தேரரின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மற்றும் சுமங்கள தேரர் ஆகியோரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பனைசார் உற்பத்தி நிலையம் வவுனியாவில் திறந்து வைப்பு!



வவுனியா, ஜுன் 02

வவுனியாவில், பனை சார்ந்த பொருள்கள் உற்பத்தி நிலையம் நேற்றுச் சனிக்கிழமை கைத்தொழில் கூட்டுறவு நீண்ட கால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் புத்திக பத்திரணவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, ஓயார் சின்னக்குளம் கிராமத்தில் சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி துளசி பனைப்பொருள் சார்ந்த உற்பத்தி நிலையத்துக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் பனையோலை உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்குமான நிலையமாகச் செயற்படவுள்ளது.

பனம்பொருட்கள் உற்பத்திக் கிராமம் என்ற தொனிப்பொருளில் அரும்பொருட் கலையகத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தை பிரதி அமைச்சர் புத்திக பத்திரண திறந்து வைத்தார்.

கிராம மட்டத்தில் இருந்து கைத்தொழில் உற்பத்தியைப் பெருக்கி வருமானத்தை ஈட்டும் நோக்கோடு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிலையத்தின் திறப்பு விழாவில் தேசிய அருங்கலைப் பேரவையின் பணிப்பாளர் மற்றும் வவுனியா மாவட்ட உதவி அரச அதிபர், பிரதேச செயலாளர், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இணைப்பாளர்கள், வவுனியா நகரசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# தாக்குதல்கள் குறித்து சாட்சியமளிக்கத் தயார்

## ஞானசார தேரர் கூறுகிறார்

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சாட்சியமளிக்கத் தயார் எனப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போலியான ஊடகக் கண்காட்சிகளை நடத்தாது உண்மையான முறையில், சாட்சி விசாரணைகளை நடத்தினால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முக்கிய விடயங்களை அம்பலப்படுத்த நான் தயார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சியம் வழங்க முடியும்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சாட்சி விசாரணைகள் வெறும் கண்துடைப்பு நாடகம். இந்தச் சாட்சி விசாரணைகளால் புலனாய்வுப் பிரிவினர் மேலும் பலவீனமடைவர்.

இந்தப் பிரச்சினையை மெய்யாகவே தீர்க்க விரும்பும் தரப்பிடம் என்னிடம் உள்ள தகவல்களை வழங்கத் தயார்.

புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களை நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன் அழைத்து ஊடகங்களின் முன்னிலையில் விசாரணை செய்வது இளம் தம்பதியினர் முச்சந்தியில் – வெட்ட வெளியில் தேனிலவை அனுபவிப்பதற்கு நிகரானது – என்றார். (ஐ)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் யாழ்ப்பாணத்தில் பதவியேற்றார்



யாழ்ப்பாணம், ஜுன் 2

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நிஹால் தல்துவ நேற்றுச் சனிக்கிழமை பதவி ஏற்றுக் கொண்டார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தரவின் பிரகாரம், யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக மத வழிபாடுகளுடன் அவர் பதவியேற்றுக்கொண்டார்.

பதவியேற்பின் அவருக்கு பொலிஸ் அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

காலி மாவட்டத்தில் இருந்து, தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு மாற்றம் பெற்றுவந்துள்ள பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவின் இந்தப் பதவியேற்பு நிகழ்வில், மத குருமார்கள், பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

**தீபம் திருமண சேவை**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சாதகங்கள் இங்கே பொருத்திக் கொடுக்கப்படும். மிக துரிதமான நம்பிக்கையான திருமண சேவை.

தொடர்புகளுக்கு: 021 792 21 72
078 3971934
0776606398

முகவரி இல: 4/3 உடுவில் தெற்கு.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 02.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.